சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 36 1-10-42 Price 2 Annas

இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு ஆரோக்கியத்தைத்

தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

முதல் பரிசு

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

முத்தண்ணுக்கள் சபையில் முதல் பரிசு இந்த முறை சென்னைக்கு உரித்தாகும். சபைத்தலைவர் ஸர் டேவிட் தேவதாஸ்; கவர்ன்மெண்டு கக்ஷித் தலைவர் ஸர் முகம்மத் ஊஸ்மான்; கவர்ன்மெண்டைத் தாங்கிப் பேசிய பிரபலஸ்தர்கள் ஸர் எ. பி. பாத்ரோவும் ஸர் கே. ராமுண்ணி மேனனும். ஸர் தேவதாஸுக்குத்தான் சற்றுக் குறைப்பட இடமுண்டு. அக்கிராசனப்பதவி அவர் வாயை அடைத்து விட்டது; இல்லாவிட்டால் வாசா கைங்கர்யத்தில் அவரும் ஒரு கை பார்த்திருப்பார். ஆனால் யாரை நம்பலாம் என்று கவர்ன்மெண்டுக்குத் தெரியும். பேசாமலே அவர் மீது கடாக்ஷம் திரும்பிவிட்டது. அநுக்கிரஹ சக்தி தொடர ஆரம்பித்திருக்கிறது. எங்காவது ஏற்றி விடும். பொறுத்திருந்தால் போதும்!

பொறுத்திருந்தார் ஸர் முகமத் ஊஸ்மான்: பதவி அவரைத் தேடிக்கொண்டு வந்தது. அவரும் எதிர்பார்க்கவில்லை; வேறு யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். ஜாதக விசேஷம் என்றே சொல்ல வேண்டும். பல வருஷங்கள் பெரும் பதவி வகித்தார் சென்னையில்; நல்ல ஞாபகமூட்ட எதுவும் செய்யவில்லை. அடக்குமுறை காலங்களில் அவர் பெயர் அடிபட்டதுண்டு. அதற்காக அவர் தூக்கம் இழக்கவில்லை; உடல் வாடவில்லை; இன்னும் ஒரு சுற்றுப் பெருத்தார் என்றும் சொல்லலாம். அதிகாரத்தை விட்டு விலகினார். அதிகாரப் பித்து விடவில்லை. செக்குமாடுபோல் அதிகாரத்தை சுற்றிச் சுற்றி வந்தார். அதிகாரம் தாங்குவோரை ஆச்ரயித்து நின்றார்.

இந்த அசாதாரண குணத்திற்கு அசாதாரண காலத்தில் பிரிசம் ஏற்பட்டது. ஆனால், இயற்கையில் அவரிடம் ஒரு ஊனம். கள்ளங்கபடம் அறியாதவர். பிறந்த மேனிக்குப் பேசிவிடுவார். ராஜாங்க சபையில் அவர் பேசியதே இதை மெய்ப்பிக்கும். நாட்டில் எந்தக் கட்சியும் கவர்ன்மெண்டை மனப்பூர்வமாக ஆதரிக்கவில்லை என்றார் அவர். கவர்ன்மெண்டின் கக்ஷியை எவ்வளவு தூரம் அது பலஹீனப்படுத்துகிறது என்பதை அவர் அறியவில்லை. அரசியல் பிரச்னைகளில் ராஜப்பிரதிநிதி கேட்டாலொழிய நிர்வாகசபை குறுக்கிடுவதில்லை என்றார். நிர்வாக சபையின் 'பவிஷு' அவ்வளவு தான் என்பதைத் தம்மை அறியாமல் தெளிவாக்கிவிட்டார். அடக்கு முறைகளை அவர் தாங்கிப் பேசியதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. பூர்வாசிரமத்தில் அவர் சங்கோசப்பட்டிருந்தாலல்லவோ இன்று சந்தேகப்பட வேண்டும். சுவடு மாறாமல் கடமையை நிறைவேற்றினார்.

கடமையெனக் கருதி எவ்வளவு கஷ்டப்பட்டு நிறைவேற்றினாலும் எல்லாருக்குமா யோகம் காத்திருக்கிறது? சமயம் நேர்ந்த போதெல்லாம் கவர்ன்மெண்டைக் காட்டிக் கொடுக்காமல்தான் பேசி வந்திருக்கிறார் ஸர் பாத்ரோ. ஆனால், அதிர்ஷ்டம் பஞ்சை. ஏதேதோ உத்தியோகம் எட்டியெட்டிப் பார்த்தது. பெரிய உத்தியோகம் எது காலியானாலும் அவர் பெயர் அடிபடாமல் இருப்பதில்லை. நேற்றுகூட ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் காலி செய்த உத்தியோகத்திற்கு ஸர் பாத்ரோவின் பெயரை ஜோஸ்ய ஜாபிதாவில் சேர்த்து விட்டனர். இந்த முறையாவது பலிக்குமா? பலித்தாலும் பலிக்காவிட்டாலும் தாம் கடமையெனக் கருதியதை அவர் விடப் போவதில்லை. குணம் ஓரிடம் காண்பதும், குறை ஓரிடம் காண்பதும் அவருக்கு சுபாவமாகி விட்டது. குணம் கவர்ன்மெண்டிடத்தில்; குறை மக்களிடத்தில்.

ஸர் ராமுண்ணி மேனன் ராஜீயத்துறையில் உழைத்தவர் அல்ல. என்றைக்கும் சிரத்தை காட்டியதாகச் சொல்லவும் இடமில்லை. பள்ளிப் பழக்கம் ஜாஸ்தி. காய்தாவும் கண்டிப்பும் கலாசாலையில் கண்டவர். டானுவுக்கு சகஜமான ஸ்வரூபத்தில் எந்தப் பிரச்னையும் அவர் கண்ணுக்குப் புலப்படும். அதிகார அமல் நியாயமென்று அவர் கருதினால் தவறு ஏது? அவர் சொன்னதில் ஆச்சரியமில்லை; சொல்ல இடங்கொடுத்தது தான் தவறு. விஷயம் அறிந்த கண்டனத்திற்கு மதிப்புண்டு. விஷய விளக்கம் அறியாதவர் கவர்ன்மெண்டு செய்ததெல்லாம் சரி, மக்கள் கேட்பதெல்லாம் தவறு என்றால் யாருக்குப் பிரீதி? மொத்தத்தில் சென்னைக்குப் பரிசுபெற மிகப்பாடுபட்டிருக்கின்றனர். அவர்கள்பால் மக்கள் கடமைப்பட்டிருப்பதை என்றைக்கும் மறக்க மாட்டார்கள்! கவர்ன்மெண்டுக்கு ஒரு வார்த்தை. கோபுர பொம்மைகள் கோபுரத்தைத் தாங்கவில்லை. ஞாபகப்படுத்திக் கொண்டால் பிரயோஜனம் உண்டு.

—சென்ற மாதம் 26-ந் தேதி எழுதப்பட்டது

★

விஷ சக்கிரம்

பத்திரிகைகளை எடுக்க கை கூசுகிறது. படிக்கப் படிக்க மனச்சோர்வே அதிகரிக்கிறது. கவலையெல்லாம் மாறிவிட்டது. யுத்தத்தின் போக்கில் அவ்வளவு சிரத்தையில்லை. இந்திய சம்பவங்களே மனதைக் கவர்ந்து வருகின்றன. இன்றைக்கு எங்கே என்ன அல்லலோ என்ற கவலை! நாள் தவறாமல் ஒரு மண்டலமாக ஒரே எழவோலைதான். இன்னின்னார் காவலில் வைக்கப்பட்டனர்; இவ்வளவு பேர் கைது செய்யப்பட்டனர்; இங்கிங்கே ஊர்வலங்களும் மறியல்களும் நடந்தன; இந்திந்த ஊர்களில் தடியடியும் தடையும் தொடர்ந்தன; என்ன சமாசாரம் இது! எங்கும் அபத்தப் பஞ்சாங்கம்; கேட்க விரஸமே தட்டுகிறது. நிலைமை அடங்கி வருவதாகவே அதிகாரிகள் கூறுகின்றனர். அடங்கிவிட்டதாக நிம்மதி கொள்ள மனம் துணியவில்லை.

விமோசனத்திற்கு வழி காண்பது அரிதாகி வருகிறது. எல்லாருக்கும் சமரஸத்தில் சிரத்தையுண்டு. சுபாவமாகவே இந்தியர் ஹத்துமீறி நடப்பவரல்ல. தர்மத்திற்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டவர். இவ்வளவு இருந்தும் ஈடாகவில்லை. நிலைமை இன்னும் கட்டுக்கடங்கவில்லை. காரணம் என்ன? ஜனங்களிடையே அவநம்பிக்கை அவ்வளவு ஆழமாகப் பதிந்து கிடக்கிறது. அதை நீக்க கவர்ன்மெண்டார் முற்படவில்லை. அமுல் நடத்துவதிலேயே கவனமெல்லாம் திரும்பியிருக்கிறது. அமைதியைக் காக்க அடக்குமுறை மாத்திரம் போதாது என்று எல்லாரும் சொல்லுகின்றனர். சொல்பவர் காங்கிரஸில் சேராதவர் மாத்திரமல்ல; ஆளும் ஜாதியைச் சேர்ந்தவர்கூட; யார் சொல்லியும் ஏறவில்லை.

காலமோ அசாதாரண காலம்; நெருக்கடி மிகுந்த நேரம்; பகைவன் வாயலில் சமயம் காத்துவருகிறான். அவனை விரட்டியடிக்கவேண்டும். அதற்கு முன் பாத்தியம் அளிக்க வேண்டும். அதிகாரிகளின் போக்கைக் கவனித்தால் அது ஞாபகத்திலிருப்பதாகக் காணவில்லை, கலவரத்தை அடக்க மாத்திரம் அதைக்காரணமாகச் சொல்லுகின்றனர். உண்மையில் அதையொட்டிக் கவலையிருந்தால் கார்யம் வேறாக இருக்கவேண்டும். நாட்டுமக்கள் எதிராளியை வேண்டவில்லை; விரும்பவில்லை; விரட்டியடிக்கத் துடிக்கின்றனர். உதவி உருவாக வசதியே கோருகின்றனர். அதிகாரம் மாறவேண்டுமென்பது வெகுநாளைய கோரிக்கை. அதிகாரம் இன்று மாறினால், நேசக்கட்சிக்கு வளலூட்டும் என்பது பழைய கோரிக்கைக்குப் புதிய காரணம். இனியும் பழையகாரணங்களைச் சொல்லிக் கழிப்பதற்கில்லை. என்றைக்காவது மாற்றுவது உண்மையானால், விசேஷ அனுகூலமுள்ள இன்று மாற்றத் தயங்குவானேன்? சரியான ஜவாபு இல்லை. சால்ஜாப்பு செல்லவில்லை.

ஆதரவும் வேண்டும்; அடங்கியும் இருக்கவேண்டும் என்றால் ஏறுமா? ஏறவில்லை. அதுதான் சூக்ஷமம். வெளிப்படையாகச் சொல்லக்கூடிய காலமல்ல; சொல்ல வெட்கப்படுகிறார்கள்போலும். உண்மையை எவ்வளவு நாள் மறைக்க முடியும்? ஏற்கெனவே சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் பிரசல் எட்டி விட்டது. சமாசாரத்திற்கு வேலி போடுவது சாத்தியமில்லை. கூலிப் பிரசாரம் பலிக்காது. கேலியாகவே முடியும். பிரிட்டிஷ் மக்கள் அறிவார்களானால், நியாயம் பிறக்கத் தாமதமிராது. அறியவில்லை. அறிய சிரத்தையில்லை. ஊகித்தறிய சூக்ஷ்மம் போதாது. என்ன செய்வது? எல்லாரும் அதையே கேட்கிறார்கள். மக்களை ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு விக்னங்கள் பல முளைக்கின்றன. மகாத்மாவைக் காண யாருக்கும் அநுமதியில்லை. காங்கிரஸ் இயக்கத்தைத் துவக்கவில்லை. துவக்கியதாகவே சிந்தாந்தப்படுத்தப்பட்டு வருகிறது. துவக்கியதாகவே விவகாரத்திற்கு வைத்துக்கொள்வோம். துவக்கியவர்களை அணுக வேண்டாமா நிறுத்தச் சொல்வதற்கு? எவ்விதச் சந்தேகத்திற்கும் இடமில்லாத தலைமைப் பாதிரிக்கும் அநுமதி மறுத்து விட்டனர். நிலைமை அடங்கினால். ஆக்கமுறைபற்றிப் பேச இடமுண்டாம். ஆக்கமுறை கண்டால் நிலைமை அடங்க இடமுண்டு. விஷ சக்கிரம் சுழன்று வருகிறது. இந்த விஷ சக்கிரத்தை யார் வளைப்பது?

முதலாவது காங்கிரஸ் மஹாசபை

பம்பாயில் கூடிய இந்த மஹாசபையில் மணி ஐயரும் கலந்துகொண்டார். படத்தில் அவர் மேல் வரிசையில் (வலதிலிருந்து 4-வது) உட்கார்ந்திருப்பதைக் காணலாம்.

தென்னாட்டுத் திலகம்

"கே. எஸ். ஆர்."

இம்மாதம் முதல் தேதியுடன் மணி ஐயர் "இம் மண்டலத்தில் தோன்றி ஒரு நூற்றாண்டு முடிவாகி விட்டது. இவர் பிறந்த போது, நாடு இருந்த நிலைமை ஒரு விதம்: இறந்த போது நாடு இருந்த நிலைமை வேறு விதம். பராதீனப்பட்ட நாட்டில் பிறந்தார்: சுவாதீனமுள்ள நாட்டில் இறக்க ஆசைப்பட்டார். மனோபீஷ்டம் சித்திபெறவில்லையாயினும், ஸேவா கைங்கரியத்தில் முனைந்த முதல்வர் என்ற சிறப்பு இவருக்கு உரித்தாகும். மணி ஐயருடைய வாழ்க்கையை ஆராய்வோமாயின் நாம் அதில் பல அபூர்வ அம்சங்களைக் காண முடியும்: ஆராய்வதும் மனத்திற்குத் திருப்தியையே தரும்! தென்னாட்டுத் திலகம் என இவர் திகழ்ந்தார். இவர் ஒரு தீர்க்கதரிசி. வருங்காலத்தை முன்னதாக அறிந்து அதற்கேற்பத் திட்டம் வகுத்துக் கொள்ள முயன்றவர். தமது காலம் பூராவும் தம்மிடம் மக்கள் வைத்த மதிப்பு மங்கமாதவாறு வாழ்ந்தவர்: நெருக்கடியான நேரத்தில் தாமே தலைமை வகிக்க முன் வந்தவர்: அபர வயதிலும் எதற்கும் அஞ்சவில்லை, திட புருஷர்! தீர புருஷர்!! தீவிர தேசபக்தர்!!! நம் அரசியல் வாழ்வில் நமக்கும் இன்று தாராளமான பங்கு கிடைத்திருப்பதற்கு மணி ஐயர் போன்ற உத்தமர்கள் தொண்டு புரிய முன்வந்ததே காரணமாகும்.

பிதாவின் பெருமை

மணி ஐயர் - இவரது முழுப்பெயர் டாக்டர் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் – மதுரையில் 1842-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல்தேதியன்று தோன்றினார். பிதாவின் பெயர் சூறாவளி சுப்பையர். உண்மையிலேயே அவரது வாழ்க்கை சூறாவளிபோல இருந்தது. ராமநாதபுரம் சமஸ்தானத்தில் உத்தியோகமேற்ற அவர், ராமநாதபுரம் ராணி பர்வதவர்த்தனி நாச்சியாருக்காக மிகவும் சிரமப்பட்டார்: நிர்வாக உரிமையை வாங்கிக் கொடுக்க அதிக பிரயாசைப்பட்டார்: இவரது நேர்மையான நடத்தை ராணியாரின் அன்பைக் கவர்ந்தது: பிறகு ராணியார் கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு அவர் மதுரை தேவஸ்தானத்தில் சில திருப்பணிகளை நடத்தத் திட்டமிட்டார்: அதைத் தமது சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. அவரது நடத்தை அதிகாரிகளையெல்லாம் வியக்கச் செய்தது. மதுரை கலெக்டர் அவரிடம் அவ்வளவாக ப்ரீதி பாராட்டவில்லை: அவரை அடக்கி வைக்கவே அவர் முயன்றார்: இது விஷயமாக 1842-ல் அவர் சென்னை ரெவினியூ போர்டாருக்கும் ஒரு மனுச் செய்துகொண்டார்: அதில் தமக்கிழைக்கப்பட்டு வரும் கஷ்டங்களையும் அவர் குறிப்பிட்டிருந்தார்: எழுதிப் பிரார்த்தித்துக்கொண்டதுதான் மிச்சமே தவிர, கண்ட பலன் ஒன்றும் கிடையாது. இத்தகையவரது புத்திரராக நம் மணி ஐயர் பிறந்தார். அவரது இரண்டாம் மனைவிதான் மணி ஐயரின் தாயார். இவர் மூன்று வயதுக் குழந்தையாக இருக்கும்போதே அவர் காலமானார். சுப்பையருக்கு ஜோசியத்தில் விசேஷ நம்பிக்கை உண்டு. தாம் இறக்குமுன், தமது மனைவியிடம், இவர் உன்னத ஸ்தானத்தை எட்டுவர் என அவர் கூறியதில் ஆச்சரியமேது?

வித்தியாப்பியாஸம்

ஒன்பதாம் பிராயத்தில் இவர் மதுரையில் ஒரு தையற்காரர் நடத்தி வந்த ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்: இதற்கப்புறம் இவர் இதர பள்ளிகளில் படித்து விட்டு மதுரை ஜில்லா பாடசாலையில் சேர்க்கப்பட்டார் ஒவ்வொரு வகுப்பிலும் இவர் திறமையுடன் படித்துத் தேர்ச்சி பெற்றார், பள்ளிக்கூடப்படிப்பு பூர்த்திபெறும் வரை ஒவ்வொரு வருஷாந்திரக் கொண்டாட்டத்திலும் இவருக்குப் புத்தகங்கள் பரிச்சாகக் கிடைத்து வந்தன. 1859–ஆம் வருஷம் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தது; தேர்ச்சி பெற்றவர், ஜாபிதாவில் இவரது பெயரே முதல் நின்றதைக் கண்டார் ஜில்லா கலெக்டர் இவர் தமது தலைமைக் குமாஸ்தாவின் சகோதரர் என்பதையறிந்த அவர் இவரைத் தமதாபீஸில் ஒரு குமஸ்தாவாக எடுத்துக்கொண்டார். இவ்வாறு பதினேழாம் பிராயத்திலேயே உத்தியோகம் ஏற்க நேர்ந்தது: மாதச்சம்பளமோ இருபது ரூபாய். ஆனால் அக்கால நிலையைக் கவனிப்பவர்களுக்கு இந்தச் சம்பளம் சாமான்யமானதல்ல என்றே தெரியவரும்.

தொழில் மாற்றம்

குமாஸ்தாவாக இருக்கையிலேயே தனிமையாக்ப் படித்து இவர் ப்ளீடர் பரீக்ஷையிலும் முதல்வராக தேர்ச்சி பெற்றார்: ஜில்லா நீதிபதி இவர் தம்முன் ஆஜரானபோது தமக்கு ஸலாம் பண்ணவில்லை என்ற வியாஜத்தைக் கொண்டு, இவருக்குத் தொழில் புரிய அனுமதி மறுத்து விட்டார். இதனால் மணி ஐயர் மனந்தளரவில்லை. 1862-ல் இவர் பப்ளிக் ப்ராஸிக்யூட்டராக ஜில்லா கலெக்டரால் நியமிக்கப்பட்டார்: கோர்ட்டில் முதல் நாள் வழக்காடப்போனபோது இவருக்கு வினோதமான மரியாதை அளிக்கப்பட்டது. நீதிபதி தம்மிடம் காட்டிய வெறுப்பினால் இவர் சற்று மனச்சோர்வுற்றிருந்தார். இந்த சமயத்தில் சென்னை சர்வகலாசாலையார் நடத்தும் சட்டப் பரீக்ஷையில்தேறி சென்னை ஹைகோர்ட்டில் வக்கீலாகத் தொழில் புரிய முடியும் என்பது இவருக்குத் தெரிய வந்தது அந்நாளில் மாணவர்களுக்கு அனுகூலம் இருந்தது: அந்நாளில் சர்வகலாசாலை வகுப்புகளில் சேராமலேயே பரீக்ஷை எழுதலாம். ஆகவே இவர் தனிமையாகவே மெட்றிகுலே

1870-ல் எடுத்த படம். மணி ஐயர் வக்கீல் தொழிலை ஆரம்பித்த சமயம்

அந்திய காலத்தில் எடுத்த படம். வைராக்கிய பருவத்தைக் காட்டுவது.

ஷன், "எப் ஏ." முதலிய பரீக்ஷைகளில் 1865-இலும் 1866-இலும் தேர்ச்சி பெற்று, அதற்கு இரண்டு வருஷங்களுக்கப்புறம் "பி. எல்" பரீக்ஷையிலும் தேர்ச்சி யடைந்தார். இது காரணமாக இவருக்குத் தாசில்தார் பதவியும் கிடைத்தது: ஆனால் ஸர்க்கார் உத்தியோகத்தில் இவருக்கு மோகம் இல்லை: ஒருவருடைய தயவையும் ப்ரதீக்ஷிக்காமல் நியாயவாதத் தொழிலை மேற்கொள்வதையே இவரது உள்ளம் விரும்பியது. ஆகவே, கடைசியில் தாசில்தார் பதவியைத் துறந்து விட்டு, சென்னைக்கு வந்து சேர்ந்தார்; இங்கு இருந்த மிஸ்டர் ஜே. ஸி. மில்ஸ் என்ற பாரிஸ்டரிடம் ஒரு வருஷ காலம் தொழில் பயின்றார். 1869-ஆம் வருஷம் நவம்பர் மாதம் இவர் ஹைகோர்ட் வக்கீலாகப் பதிவு செய்யப்பட்டார்: மிஸ்டர் மில்ஸ் இவருக்கு அளித்த நற்சாக்ஷிப் பத்திரத்தில் இவரது நடத்தையை வெகுவாக சிலாகித்தார்.

மதுரையில் ஸேவை

வக்கீல் தொழில் புரிய மணி ஐயர் மதுரைக்கே திரும்பினார், சேவைபுரிவதற்கான சந்தர்ப்பம் சொந்த ஊரில் சம்பவித்தது: 1870-ல் இவர் மதுரை நகரசபை மெம்பராக நியமிக்கப்பட்டார். இந்த சபையில் இதற்கப்புறம் பத்து வருஷ காலம் இவர் ஸ்தானம் வகித்தார், தம்மீது அநாவசியமாகப் புகார் செய்யப்பட்டதைப் பொறுக்கமாட்டாமல் இவர் தமது பதவியை விட்டுத் துறந்தார். 1882-ல் மறுபடியும் நகரசபையில் ஸ்தானம் வஹிக்கும்படி இவரை ஜில்லா அதிகாரி வேண்டிக்கொண்டார்: நகரசபை உபதலைவராகவும் இவர் இதற்கப்புறம் இருந்தார்: இரண்டரை வருஷகாலம் மேலும் ஊழியம் புரிந்தார். மதுரையைப் பல விதத்திலும் அழகுபடுத்துவதில் சிரத்தை காட்டினார். ஊரில் ஒரு பூந்தோட்டத்தை அமைத்து, ஜல வசதிக்கும் இவர் ஏற்பாடு செய்தார். ஏழாம் எட்வர்ட் மன்னர் வேல்ஸ் இளவரசாக இருந்தபோது மதுரைக்கு 1876-ல் விஜயம் செய்தார். அப்போது மணி ஐயரே அவருக்கு உபசாரப் பத்திரத்தைப் படித்துக்கொடுத்தார்; தடபுடலான ஏற்பாடுகளைச் செய்துவைத்தார். மறுவருஷம் ராஜப் பிரதிநிதி லார்ட் லிட்டன் இவருக்கு ஒரு கௌரவப் பத்திரத்தை அளித்தார். இதற்கப்புறம் சில வருஷங்கள் கழித்து சென்னை கவர்னர் ஸர் கிராண்ட் டப் மதுரைமாநகருக்கு விஜயம் செய்தபோதும் இவரே அவரையும் சிறப்பாக வரவேற்று உபசரித்தார். மதுரை தேவஸ்தானக் கமிட்டி மெம்பராகவும் இவர் பொறுக்கியெடுக்கப்பட்டார். கமிட்டி மெம்பர் ஒருவர் தேவஸ்தான பணத்தைக் கையாண்டுவிட்டதை இவர் கோட்டில் வழக்காடி நிரூபித்து விட்டதே இவர் இந்தப் பொறுப்பை மேற்கொள்ள நேர்ந்ததற்குக் காரணமாகும், 1884-ல் மணிஐயரது மனைவியார் இரண்டு வருஷகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த பின்பு காலமானார்.

சென்னை சட்டசபை

தமது பத்தினியாரின் தேகவியோகத்திற்குச் சிறிது காலத்திற்கு முன்பு இவர் சென்னை சட்டசபை மெம்பராக கவர்னர் பிரபுவால் நியமிக்கப்பட்டார், இதற்குக் காரணம் இவர் பொதுஜன சேவையில் பெரிதும் ஈடுபட்டிருந்ததேயாகும். 1882-இல் வைஸ்ராய் லார்ட் ரிப்பன் ஸ்தலசுயவாட்சி முறையை விஸ்தரிக்க விரும்பினார். அதற்காக ஒரு தீர்மானத்தைத் தயாரித்து அவர் மாகாண ஸர்க்கார்களுக்கு அனுப்பி அபிப்பிராயத்தை அறியலானார், சென்னை ஸர்க்கார் இதற்காக ஒரு கமிட்டியை நிறுவினர். இதில் மணி ஐயரும் இடம் பெற்றார். மற்ற மெம்பர்களது அபிப்பிராயத்தை இவர் ஏற்க மறுத்து விட்டார். ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் மக்களுக்கே உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்றார் இவர். அதிகாரிகள் குறுக்கிடுவது கூடாது என்பதையும் இவர் எடுத்துச் சொன்னார். தமது கருத்தை இவர்

தைரியமாக எடுத்துக் கூறினார். பொது ஜனங்களின் உண்மையான பிரதிநிதி என்ற பிரக்யாதிக்குப் பங்கமில்லாமல் இவர் நடந்துகொண்டார். பிறகு, சென்னை சட்டசபை மெம்பராக நியமிக்கப்பட்டமையும் மனைவியின் மரணமும் இவரை சென்னைக்கே வந்து குடியேறும்படித் தூண்டின. ஆகவே தலைநகருக்கே வந்துவிட்டார் இவர் தொழில் நடத்த நான்கு வருஷ காலம் சென்னை சட்டசபை மெம்பராக இருந்தார். ஸர்க்கார் கொள்கையை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியைப் பின்பற்றாத அந்த நாளைய சட்டசபையில், ஒரு மசோதாவைப் பிரேரித்து அதைச் சட்டமாக்கும் பெருமை மணி ஐயருக்கே கிடைத்தது; மலையாளம் குடிகளின் நன்மையை இவர் நாடினார்.

காங்கிரஸ் ஸ்தாபகர்

காங்கிரஸ் மஹா சபையை ஸ்தாபித்த மூல புருஷர்களுள் இவரும் ஒருவர். 1884-ம் வருஷ முடிவில் அடையாறில் பிரும்மஞான சபையின் வருஷாந்த மஹாநாடு நடைபெற்றது. அப்போது அதற்கு நானுபாகத்திலிருந்தும் பிரபலஸ்தர்கள் வந்திருந்தனர். இந்திய தேசீய மஹாசபை ஒன்றை நிறுவலாம் என்ற யோசனை அச்சமயம் உதயமாயிற்று. இந்த மஹா நாட்டில் மணி ஐயர், பாலவாய் ரங்கையா நாயுடு, பி. அநந்தாச்சார்லு முதலியோர் கலந்து கொண்டனர். பிறகு மேற்படி உத்தேசம் உருவகப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் அமைக்கப்பட்ட கமிட்டியில் இவர்கள் ஸ்தானம் வகித்தனர். பின்பு இதே மாதம் திவான்பஹதூர் ஆர். ரகுநாத ராவ் வீட்டில் மேற்படியார் கூடினர்: மறு வருஷம் மார்ச்சு மாதம் தான் எண்ணம் கை கூடுவதற்கான வழி தோன்றியது. அந்தச் சமயம் புனாவில் ஒரு தேசீய மஹா நாட்டைக் கூட்டக் கமிட்டியார் முடிவு செய்தனர். ஆனால் கடைசியில் வேறு சில காரணங்கள் பற்றி மகாநாடு பம்பாயில் தான் கூடியது. இது தான் முதலாவது காங்கிரஸ் மஹாசபைக் கூட்டம். இதற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்து 72-பேர் விஜயம் செய்திருந்தனர். முதல் தீர்மானத்தைப் பிரேரேபிக்கும் பொறுப்பு "சுதேசமித்திரன்" சுப்பிரமணிய ஐயரிடம் விடப்பட்டது. சட்டசபை விஸ்தரிப்பைப் பற்றிய தீர்மானத்தை ஆதரிக்கும் கடமை மணி ஐயரிடம் ஒப்புவிக்கப்பட்டது. அப்போது இவர் புரிந்த பிரசங்கம் மிகச் சிறிதுதான் எனினும், அதில் இவரது அநுபவம் காணக்கிடக்கின்றது. அந்தக் காலத்தில் இருந்த சட்டசபைகள் அலங்காரசபைகள் என்பதையும் அதில் ஸ்தானம் வகிப்பதால் தேசசேவைக்கான கைங்கரியத்தைத் தொடர முடியாதென்றும். தாம் கண்ட காட்சியை இவர் எடுத்துரைத்தார். பொதுமக்களின் பூரணப் பிரதிநிதித்துவம் அதில் இருக்காத வரையில் அதனால் உபயோகமில்லை என்பதை இவர் ஸ்பஷ்டமாகத் தெரிவித்துவிட்டார். மறு வருஷம் நடந்த இரண்டாவது காங்கிரஸ் மஹாசபையிலும் இவர் இந்தியாவின் வறுமையைப்பற்றிப் பிரஸ்தாபித்தார்; வரிப்பளு அதிகரித்து வருவதையும், வியவசாயி அதைத் தாங்கமாட்டாமல் கஷ்டப்படுவதையும் இவர் குறிப்பிட்டார். இவருக்கு எப்போதுமே விவசாயிகளிடம் அதிக அக்கறை உண்டு. 1877-ல் பஞ்சக் கமிஷன் முன்பு சாக்ஷியங் கூறியபோதும் அவர்களது உரிமைகளுக்காக இவர் வாதாடினார். இவ்வாறு குடிபாத்தியதையை இவர் ஆதரித்து வந்தது ஒருபுறமிருக்க, நிரந்தரத் தீர்வை முறையே நாட்டில் நிலவ வேண்டும் எனவும் இவர் வற்புறுத்தினார். அடிக்கடி தீர்வை விகிதத்தைத் திருத்தி வருவது குடிகளுக்கு வீண் கஷ்டத்தைத் தருவதாகவும் என இவர் குறிப்பிட்டார்.

மணி ஐயர் நீதிபதியாகவிருந்தபோது எடுக்கப்பட்டது

"நியாயம்தான் முக்கியம்"

1888-ம் வருஷம் இவர் கவர்ன்மெண்ட் ப்ளீடராகவும் நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியை இவர் அடிக்கடி அலங்கரித்தார். இவர் ஆஜராகிப் புகழ் சம்பாதித்த வழக்குகள் பல. திருப்பதி மகந்து வழக்கு ஒன்று இவற்றுள் மிகப் பிரசித்தமானது. த்வஜஸ்தம்பத்தின் கீழ் இருந்த பொன் முதலியன அப்புறப்படுத்தப்பட்டு, அங்கு செப்பு நாணயங்கள் போடப்பட்டன: இதுவே வழக்கிற்குக் காரணம். மகந்துவுக்காக நார்ட்டன் ஆஜரானார்: த்வஜஸ்தம்பத்தை ஒன்றும் செய்ய முடியாது என்ற தைரியம் அவருக்கு. இவர் தமது வாதத்தில் 'வானம் இடிந்து விழுந்தாலும் நியாயம் வழங்கத் தவறக்கூடாது. இப்போது ஒரு அற்ப த்வஜஸ்தம்பம் விழப்போகிறதே என்ற காரணத்தைக்கொண்டு நியாயம் வழங்காதிருப்பதா?' என்று கூறி முடித்தார். இதனால் உடனே பலன் ஏற்பட்டது. இவர் பக்கமே தீர்ப்பளிக்கப்பட்டது. இவர் வாதித்ததே உண்மையாகவும் இருந்தது. நாகேஸ்வர ஐயர் கள்ளக்கையெழுத்து வழக்கும் முக்கியமானது: இது தஞ்சையில் நடந்தது: இரண்டு மாத காலத்திற்கதிகமாகவே விசாரணை நீடித்தது; கடைசியில் இவரது கக்ஷிக்கே வெற்றி கிடைத்தது. குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கும்படிச் செய்தார் இவர். 1891-ல் ஒரு முறை ஸர் டி. முத்துஸாமி ஐயர் ரஜா எடுத்துக்கொண்ட போது இவர் மூன்று மாத காலம் சென்னை நீதிபதியாக வேலை பார்த்தார். இதே சமயம் இவருக்குக் காங்கிரஸ் தலைமைப் பதவியும் கிடைத்தது: நீதிபதியானதால் பிந்திய கௌரவத்தை இவர் ஏற்க இயலாது போய்விட்டது. 1895-ல் ஸர் டி. முத்துஸாமி ஐயர் காலமானார்: அப்போது அந்த ஸ்தானத்திற்கு இவரே நியமிக்கப்பட்டார். சுமார் 12 வருஷகாலம் இவர் இந்தப் பதவியைச் சீருடனும் சிறப்புடனும் அலங்கரித்தார்: பல உன்னதமான தீர்ப்புகளை அளித்தார். ப்ரிவி கௌன்ஸில் நீதிபதிகள் புகழுரையையும் பெற்றுக்கொண்டார்: "சாமர்த்தியம் மிகுந்த ஒரு ஹிந்து வக்கீல்" என்று அவர்கள் இவரைப் பற்றிக் குறிப்பிட்டனர். பல தடவைகள் பிரதம நீதிபதியாகவும் இவர் வேலை பார்த்தார். 1899-ல் முதல் விசை இந்த அரிய சந்தர்ப்பம் இவருக்கு வாய்த்தது. மறுமுறை 1903-ல் கிடைத்த போது அதை இவர் ஏற்க விரும்பவில்லை. லார்ட் ஆம்ப்தில் வற்புறுத்தலே இவரை அதற்கு இணங்கச் செய்தது. 1906, 1907 முதலிய வருஷங்களிலும் இவர் இந்த உயரிய ஸ்தானத்தை நிர்வகித்தார். இவர் பதவியை விட்டு 1907-ல் விலகத் தீர்மானித்தார். இன்னும் எட்டு மாத காலம் வேலை பார்த்திருந்தால் 880 பவுனுக்குப் பதிலாக 1200 பவுன் உபகாரச்சம்பளம் இவருக்குக் கிடைத்திருக்கக்கூடுமாயினும், தமது நேத்ரத்ருஷ்டி குறைந்துவிட்டது என்ற காரணத்தையொட்டி பதவியை விட்டு ஓய்வெடுத்துக்கொண்டார். அப்போது "இது நாட்டின் துரத்ருஷ்டம்" என்று கவர்னர் ஸர் ஆர்தர் லாலி இவருக்கு எழுதினார் ஒரு கடிதத்தில். சென்னை கெஜட்டில் இவரது சேவையைச் சிலாகித்து ஒரு விசேஷ அறிக்கையும் பிரசுரமாகியது.

இதர துறைகளில்

சென்னைக்கு வந்தவுடனேயே இவர் சர்வகலாசாலை செனெட் சபை மெம்பராக நியமிக்கப்பட்டார். இந்த சபையில் இருந்துகொண்டே இவர் வித்தியாபிவிருத்திக்கு வழி காட்டினார். மாணவர்களுக்குப் பாட புத்தகம் அநாவசியச் சுமையாக இருக்கக்கூடாது என்பதே இவரது துணிபு. 1896-ல் இவர் சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் ஒரு சிறந்த பிரசங்கத்தைப் புரிந்தார். கல்வியின் லக்ஷியம் யாது. கல்வி பெற்றவரது கடமை என்ன, படித்தவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறை ஆகியவற்றையெல்லாம் இவர் பிரஸ்தாபித்தார். பட்டதாரிகளுக்கு நல்ல புத்திமதி தந்தார். இது இன்றும் ஊன்றிப் படித்துப் பார்க்க வேண்டியதாகும். 1904-ல் சொற்ப காலம் இவர் சர்வகலாசாலை உப அத்தியக்ஷகராகவும் வேலை பார்த்தார். இதற்கு முன்பு வேறு ஒரு இந்தியரும் இந்த ஸ்தானத்தை வகித்தது இல்லை. 1908-ல் சர்வகலாசாலையார் இவருக்கு கௌரவ "டாக்டர்" பதவியை வழங்கினர். இதுவும் இவரைத் தவிர வேறு ஒரு இந்தியருக்கு இதன் முன்னம் வழங்கப்பட்டதே இடையாது. இவருக்கு முதல் இதைப்பெற்றவர் ஒருவர் தான்; அவர்தான் டாக்டர் மில்லர். இவர் ஆசாரச்சீர்திருத்த மஹாநாட்டிலும் தலைமை வகித்தார்: அப்போது அவசரப்படுவோருக்குப் பொறுமையின் அவசியத்தை உணர்த்தினார். வெறும் உத்சாகத்தினால் ஒரு காரியத்தில் தீவிரமாக ஈடுபடக்கூடாது என்றும் நமது மனசாக்ஷிக்கு இசையாத சேவையில் இறங்கக்கூடாது என்றும் இவர் எடுத்துச் சொன்னார். புதிய பழக்கங்களின் மோஹத்தினால் பழைய சம்பிரதாயங்களை ஒரே அடியில் மாற்றமுறப்படுவது தகாத காரியம் என்றும் இவர் எடுத்துச் சொன்னார். எதைப்பற்றியும் தீரயோசித்து முடிவு செய்வதையே இவர் வற்புறுத்தினார். ஹிந்து மத ஸ்தாபனங்கள் விஷயமாகவும் இவர் சிரத்தை கொண்டிருந்தார்: நமது மடங்கள் வக்கீல்களது பணப்பெட்டிகளாக இருக்கும் நிலைமை போய் அவைமூலம் நாட்டில் கல்வியபிவிருத்தி ஏற்படவேண்டும் என்பதே இவரது விருப்பம். ஆகவே இந்த தர்ம ஸ்தாபனங்களின் நேர்மையான நிர்வாகத்திற்கு ஏற்பாடுகள் பண்ணுவதற்காக நியமிக்கப்பட்டப் பல கமிட்டிகளில் இவர் அங்கத்தினராய் இருந்தார். தாம் பதவியை விட்டு விலகிய பின்பும் இவர் இதே நோக்கத்துடன் தர்ம ஸம்ரக்ஷண சபையை ஸ்தாபித்து இரண்டு பண்டித பரிஷத்துகளையும் கூட்டினார்.

"வயதேறியும் வாலிபர்"

பதவியைத் துறந்த பின்பு சில காலம் பாரமார்த்திக விசாரணையில் இவர் தமது வாழ்நாளைப் போக்கி வந்தார். மிஸஸ் பெஸண்டுடன் இவருக்கு ஏற்பட்ட நட்பு இவரைத் திரும்பவும் பொது வாழ்வில் வலித்திழுத்தது. 1892-ல் ராஜமஹேந்திரபுரத்தில் ஒரு வழக்குக்காகச் சென்ற போது அங்கு இவர் மிஸஸ் பெஸண்ட் செய்த பிரசங்க மொன்றைக் கேட்டார். அது முதற்கொண்டே இவருக்கு அவ்வம்மையாரிடம் அதிக விசுவாசம் ஏற்பட்டது. 1891-ல் இவருக்கு "திவான் பஹதூர்" பட்டமும் 1900-ல் "ஸர்" (கே. ஸி. ஐ. இ) பட்டமும் ஸர்க்காரால் வழங்கப்பட்டன. 1914-ல் மஹா யுத்தம் ஆரம்பமாயிற்று: அப்போது இவர் பிரிட்டிஷ் வெற்றிக்காகப் பிரார்த்தனை பண்ணினார்: பிரிட்டிஷ் தொடர்பினால் நாடு அநேக நன்மைகள் அடைந்ததாகவே இவர் அநேக காலம் கருதி வந்தவர். 1914-ல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மஹாசபையின் வரவேற்புக் கமிட்டித் தலைமை ஸ்தானத்தை இவர் ஸ்வீகரித்து, தேசத்தில் கிராமப் பஞ்சாயத்துகள் அதிகரித்து, நம்மை நாமே ஆளுவதில் நமக்கு அதிக பயிற்சி கிடைக்க வேண்டும் என்றார் இவர். இதற்கு மறு வருஷம் மிஸஸ் பெஸண்ட் "ஹோம் ரூல்" இயக்கத்தைத் துவக்கினார்; தமக்கு வயது அதிகரித்ததையும் பொருட்படுத்தாது இவர் இந்த இயக்கத்தின் கௌரவத் தலைவராக இருக்க சம்மதித்தார். இதற்காக இவர் பலத்த பிரசாரம் பண்ணினார்: இலக்கம் வலுப் பெற்று வந்தது: இவருக்கு சகாயமாகப் பலர் முன் வரத் துணிந்தனர். இந்த சமயத்தில், அதாவது 1917-இல், லார்ட் பெண்ட்லண்ட் தாம் இந்த இயக்கத்தை அடக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் எனப் பஹிரங்கமாகப் பேசிவிட்டார். இவர் இதைப் படித்துவிட்டுச் சும்மா இருக்கவில்லை. தமது மனவலிமையையும் உடனே காட்டி விட்டார். எது வரினும் தாம் பின்வாங்கப் போவதில்லை என்று பதில் கூறிவிட்டார்; தாம் தலைமை தாங்கி எதற்கும் தயாராய் இருக்கப் போவதாகவே இவர் தெரிவித்துவிட்டார். இதற்கப்புறம் ஜூன் மாதம் மிஸஸ் பெஸண்டும் அவரது இரு சகாக்களும் உதகமண்டலத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் இவரை மிகவும் வருத்திவிட்டது. பிரிட்டிஷ் தொடர்பில் தாம் கொண்ட நன்னம்பிக்கையைச் சிறிது இழக்கவும் இவர் சம்மதித்தார், அமெரிக்காவிலிருந்து அடையாறுக்கு இச்சமயம் வந்திருந்த ஹாட்ச்னர் தம்பதிகள் மூலம் ஒரு கடிதத்தை ஜனாதிபதி வில்ஸனுக்கு எழுதியனுப்பினார். அதில் நாட்டின் நிலைமையையும், மக்களுக்கிருக்கும் குறைகளையும், அதிகாரத்தின் தோரணையையும் விவரித்துவிட்டு, மிஸ்டர் வில்ஸன் தலையிட்டு இந்தியாவுக்கு சுயவாட்சி சம்பாதித்துத் தர வேண்டும் என இவர் கோரினார். கடிதம் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தது: தகவல் உடனே பிரிட்டிஷ் ஸர்க்காருக்கும் அறிவிக்கப்பட்டது. இந்தத் துணிகரமான செயல் எல்லோரையும் திடுக்கிட வைத்தது. எழுபத்தைந்து வயதானவருக்கு இவ்வளவு துணிச்சலா என்றனர் அநேகர். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் உத்தியோகம் வகித்தவர் அந்த ஆட்சியை இவ்வளவுப் பலமாகக் கண்டிப்பதா என்றனர் அதிகாரவர்க்கத்தார். எவர் எப்படிப் பேசிய போதிலும் இக்கடிதத்தினால் நாட்டிற்கு நன்மையே கிடைத்தது. ஆகஸ்டு மாதம் இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்கு சுயவாட்சி வழங்குவதாக ஒப்புக்கொண்டு ஒரு அறிக்கையைப் பிரகடனம் பண்ணினார். இதற்கு இரண்டு மாதங்களுக்கெல்லாம் மிஸஸ் பெஸண்ட் விடுதலை பெற்றார். மணி ஐயர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை ஏது?

துணிவின் சிகரம்

1917-ஆம் வருஷ முடிவில் மிஸ்டர் மாண்டேகு லார்ட் செம்ஸ்போர்டுடன் சென்னைக்கு விஜயம் செய்தார். சீர்திருத்தம் பற்றி நேரில் விசாரித்தறிவதே இவ்விஜயத்தின் உத்தேசம். மணி ஐயருக்கும் பேட்டி அளித்தனர் அவர்கள். அப்போது இவர் அவர்களிடம் ஒரு நீண்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்தார். இந்தியாவுக்கு சுயவாட்சி வழங்கப்படவேண்டியதன் அவசியத்தை விஸ்தாரமாக விளக்கினார்: இந்திய சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்கள் தாங்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்களாக நினைப்பதைத் தாக்கினார்: அதிகாரிகள் பிரித்தாளும் முறையை இனி கைவிடவேண்டும் என்று இவர் வற்புறுத்தியிருந்தார். இவரைக் கண்டதுமே அவ்விருவருக்கும் அதிகக் கோபம் வந்துவிட்டது: தங்களது ஆட்சி முறையில் குறை கண்டவருடன் சகஜமாகப் பேச அவர்கள் விரும்பவில்லை: இவரிடம் மிகக் கடுமையாக நடந்துகொண்டனர். ஆயினும் இவர் அதைப் பொருட்படுத்தவே இல்லை. இதற்கப்புறம் மறுவருஷம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இவர் எழுதிய கடிதத்தைப் பற்றிப் பிரஸ்தாபம் எழும்பியது. அப்

(13-ம் பக்கம் பார்க்க)

சீவக சிந்தாமணி-15.



கேமசரியை மணந்தது

★

—வ. வேணுகோபாலன்—

எழுதியது

★

பல்லவ தேசத்தின் எல்லையைக் கடந்து காட்டின் வழியே நடந்து சென்றான் சீவகன். சோலைக் காட்சிகளையும் மலைக் காட்சிகளையும் கண் குளிரக் கண்டு மகிழ்வுடன் நடந்தான். காட்டைக் கடந்து அதற்கு அடுத்தாற்போல் தோன்றிய மலையில் ஏறிச் சென்றான். அம் மலையிலுள்ள சுனையில் நீராடிப் பூக்களால் அருகனை அருச்சித்து வணங்கினான். மனத்தை ஒருமைப்படுத்தி அருகனைத் துதி செய்துவிட்டு சித்திரக்கூடத்தை நோக்கிப் போனான். அங்கே முனிவர்களும் யோகிகளும் செய்தற்கரிய தவங்களைப் பலவாறு செய்துகொண்டிருந்தனர். நெருப்பில் நின்றனர் சிலர். நீரில் சிலர் நின்றனர். மரத்தில் கட்டப்பட்ட உறியில் சிலர் உட்கார்ந்திருந்தனர். சிலர் மரக்கிளைகளில் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சியை ஒவ்வொன்றாகச் சீவகன் கண்டான். அவ்விடத்தில் சீவகன் புகுந்தவுடன் அங்கிருந்த முனிவர்கள் அவனை வரவேற்று உபசரித்தனர். மலைவாழைக்கனி, பலாக்கனி, மாங்கனி, வள்ளிக் கிழங்கு முதலியவற்றைக் கொடுத்துச் சீவகனை அருந்தச் செய்தனர். சீவகன் பல கலைகளிலும் வல்லவன் என்பதை உணர்ந்த முனிவர்கள், அவனைப் பலகேள்விகள் கேட்டனர். அவற்றிற்குத் தக்கவிடையைச் சீவகன் மொழிந்தான்.

பின்னர் தானும் முனிவர்களுக்குச் சில நீதிகளைச் சொல்ல எண்ணி, "ஐயன்மீர்! கல்லைக் கழுத்தில் கட்டிக்கொண்டவன் கடலில் நீந்த முடியுமானால் காமநுகர்ச்சியை விரும்பி மனைவியோடு தவம் செய்யும் நீங்களும் முத்தி பெறுவீர்கள் என்பது நிச்சயம். ஆதலால் உங்களுடைய தவம் பிறவியை நீக்காது" என்று கூறினான். சீவகன் கூறியதைக் கேட்டு முனிவர்கள் கோபமும் வெட்கமும் கொண்டனர்;

"குமர! யாங்கள் தவம் செய்யும் வழியே முத்தி அடைவதற்கு நேரானது. திருமால் கூறிய ஆகமத்தின்படியே யாங்கள் செய்கின்றோம். அதில் குற்றம் இருந்தால் நீ கூறுக, நீ சொல்வது சிறிதும் பொருந்தாது" என்று அவர்கள் சொல்லினர்.

"ஐயன்மீர்! யான் கூறுவதற்கு மனம் வருந்தவேண்டாம். தொங்குகிற உறியிலிருந்து காயையும் பழத்தையும் அருந்தினால் பாபம் நீங்கி முத்தி பெறலாமென்று ஆகமத்தில் கூறியுள்ளதா? அவ்விதமானால் வௌவால் மரத்திலே தொங்கிப் பழத்தை அருந்துகிறது; அதுவும் முத்தி பெறுமல்லவா? புல் பூண்டுகளைத் தின்று தீயில் நின்றால் முத்தி பெறலாமென்றால் கல்லை உண்டு வெம்பிய காட்டிலே வாழ்கின்ற புறாக்களும் முத்தி பெறுமன்றோ! சடை வளர்த்து நீரில் மூழ்கித் திரிந்து முத்தி பெறலாமென்றால் காட்டிலுறையும் கரடியும் குளத்திற் சென்று மூழ்கி முத்தி பெறுமன்றோ? ஆதலால் உம்முடைய பயனில்லாத வார்த்தைகளைக் கூற வேண்டா! மனைவியரைப் பிரிந்திருந்து தவம் செய்யுங்கள். வெண்மையான ஆடையில் பட்ட இரத்தத்தை இரத்தத்தாலேயே போக்க முடியாது; அது போலவே பெண்டிரிடத்து ஆசையாலுண்டான பாவத்தை அப்பெண்டிரோடு சேர்ந்திருந்து போக்க முடியாது. ஆடை வெந்துபோகுமென்று பயந்தவர் நெருப்பை ஆடைக்குள்ளே வைத்து மூடினால் அது வெந்து போகுமல்லவா? ஆதலால் மனைவியரை விட்டு நீங்கித் தவம் செய்து முத்தியடையுங்கள்" என்று பல நீதிகளைக் கூறினான் சீவகன்.

சீவகன் கூறிய மொழியால் முனிவர்கள் நல்லறிவு பெற்றனர். உடனே சீவகனை வணங்கி, "ஐய! உன்னால் அறிவு பெற்றோம்" என்று கூறி மனைவியரைப் பிரிந்து தவம் செய்யச் சென்றனர். அவ்வளவில் சூரியாஸ்தமனம் ஆயிற்று. சீவகன் அன்று ராப்பொழுதை அவ்விடத்தேயே கழித்துக் களைப்பு நீங்கினான்.

பொழுது விடிந்ததும் சீவகன் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டான். சீவகன் போவதற்குத் தக்க வழிகளை முனிவர்கள் கூறி வழியனுப்பினர். பல ஆறுகளையும் காடுகளையும் சீவகன் கடந்து சென்றான். அங்கு ஓரிடத்தில் தாமரைத் தடாகத்தைக் கண்டு அதன் வழியே சென்று தக்க நாட்டின் எல்லையை அடைந்தான். அந்நாட்டின் வளப்பங்களைக் கண்டு மகிழ்ந்து கேமமாபுரம் என்னும் அதன் தலைநகரை அடைந்தான். அங்கே ஓர் ஆலமரத்தின் நிழலில் அமர்ந்து அருகனைத் தியானித்திருந்தான்.

* * * *

கேமமாபுரம் என்னும் அந்நகரத்திற்கு நரபதிதேவன் என்பவன் அரசன். அரசன் போன்ற செல்வமுடைய வணிகன்— சுபத்திரனென்பவன்— அந்நகரத்தில் விளங்கினான். அவன் மனைவியின் பெயர் நிப்புதி. அவர்களுக்கு மகளாய்த் தோன்றிய கேமசரி என்னும் கன்னி அழகு மிக்க விளங்கினாள். அழகாலும் பெயராலும் அவள் புகழ் நாடெங்கும் பரவியது. அவள் சாதகத்தை கணித்த சோதிடன், "இவள் ஆடவரெல்லாரையும் ஆடவாரக மதிக்க மாட்டாள். ஒரு வீரனைக் கண்ட பொழுதே இவள் நாணம் கொள்வாள்; அவனே இவளுக்கு கணவனாவான். அவனுக்கே இவளைக் கொடுங்கள்" என்று கூறினான். கேமசரி கணவனை அடைவதற்காகப் பல ஆடவர்களையும் தன் மாளிகைக்கு அழைத்து சுபத்திரன் விருந்து செய்வித்து வந்தான். ஆடவர் விருந்துண்ணும்போது, ஒரு தூணின் மறைவில் நிப்புதியுடன் கேமசரி வந்து நிற்பாள், தன் கணவன் இவர்களில் உள்ளரோ என்று நோக்குவாள். இவ்விதம் நாள் தோறும் நிகழ்ந்தது. கேமசரி ஆடவர் யாரையும் கண்டு நாணம் அடையவில்லை, கேமசரிக்குக் கணவன் எப்போது வாய்ப்பான் என்று சுபத்திரன் ஏங்கியிருந்தான். கேமசரி மணப்பருவமடைந்து விளங்குவதைக் கண்டு அவள் தாய் நிப்புதி மனம் குழைந்து வருந்தினாள்.

"பூ மலர்ந்தபோதே அதிலுள்ள தேனை வண்டு உண்ண வரும். அது போலவே மகளிர் நுகர்ச்சியுமாதலால், விரைவில் இவளை மணம செய்து கொள்ளுதற்குரிய வீரன் வருவான்; நீ வருந்தாதே" என்று சுபத்திரன் நிப்புதியை ஆற்றுவித்தான்.

பின்னர் சுபத்திரன் சோலைப் புறத்தே உலாவுவதற்குத் தேரிலேறிச் சென்றான். அங்கு ஆலமரத்தின் நிழலில் அமர்ந்திருந்த சீவகனைக் கண்டான். அவன் அழகு முதலியவற்றைக்கண்டு அதிசயமுற்றான். சீவகனுடைய தேககாந்தியைக் கண்டு "இவன் திருமாலோ?" என்று ஐயங்கொண்டான். பின்னர் அவனருகே சென்று இனியவார்த்தைகளைக் கூறி அளவளாவினான். சிறிது நேரம் சீவகனும் சுபத்திரனும் பேசினர். தன் மாளிகைக்கு வருமாறு சீவகனைச் சுபத்திரன் கேட்டான். சீவகனும் உடன்பட்டான். சீவகனைத் தேரில் ஏற்றிக்கொண்டு சுபத்திரன் தன் மாளிகையை நோக்கிச் சென்றான்.

* * * *

மாளிகையில் வீணை வாசித்து அருகக் கடவுளை எண்ணிப் பாடிக் கொண்டிருந்தாள் கேமசரி, அருகக் கடவுளை எண்ணி அவள் பாடுவதைக் கண்ட நிப்புதி, 'இன்றே, இவள் ஒரு வித்தகனைப் பெற வேண்டும்' என்று தானும் அருகனைத் துதித்தாள். இந்நிலையில், சீவகனும் சுபத்திரனும் மாளிகைக்குள் புகுந்து கேமசரி இருக்குமிடம் வந்தனர். வீணை வாசித்துக் கொண்டிருந்த கேமசரி, சீவகனைக் கண்களால் நோக்கினாள், சீவகனும் நோக்கினான். இருவர் நோக்கமும் ஒன்றுபட்டன. சீவகனைக் கண்களால் அமர்ந்து நோக்கிய கேமசரி நாணங்கொண்டு எழுந்து நின்றாள். ஆடவர் யாரையும் ஆடவராக மதியாத அவள் சீவகனுடைய ஆண்மைத் தோற்றத்திற்கு அஞ்சித் தலை குனிந்து நின்றாள். சீவகனுடைய நோக்கம் கேமசரிக்கு வேட்கைத்தீயை உண்டுபண்ணியது. அத்தீயால் அவள் உருகி நின்றாள். கேமசரியின் நோக்கம சீவகன் உள்ளத்தை வருத்துதலால் அவன் மனங் குழைந்தான்.

கேமசரி சீவகனைக் கண்டு நாணங்கொண்டமையால் சுபத்திரனும் நிப்புதியும் அடங்காத மகிழ்ச்சி பெற்றனர். கேமசரியின் அழகோடு சீவகனுடைய அழகை ஒப்பிட்டுப் பார்த்தாள் நிப்புதி. கேமசரி ஒரு வீரனைக் கண்டு நாணங்கொண்டு உருகினாள், என்ற செய்தி எங்கும் பரவியது. எல்லோரும் அவ்விடம் வந்து சீவகன் அழகைக் கண்டு வியந்தனர். கேமசரிக்குத் தக்ககணவன் வாய்த்தானென்று மகிழ்ந்தனர்.

சீவகனை அழைத்துச் சென்று விருந்திட்டு உபசரித்தனர். சீவகனும் கேமசரியும் ஒருங்கே காதல் கொண்டமைக்கு யாவரும் மனமகிழ்ந்தனர். ஒரு நல்ல நாளில் சீவகனுக்குக் கேமசரியை வாழ்க்கைப்படுத்தினான் சுபத்திரன். சீவகனும் கேமசரியும் இடைவிடாமல் காமமென்னும் கனியை நுகர்ந்து பொழுது போக்கினர். சோலைகளிற் சென்று விளையாடினர். தடாகங்களிற் படிந்து நீர் விளையாடி மகிழ்ந்தனர், மலைமீதேறி அங்குள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தனர். இவ்வாறு சீவகனும் கேமசரியும் இரண்டு மாதங்கள், இன்ப வாழ்க்கை நிகழ்த்தினர்.

ஒருநாள் இரவின் பிற்பகல். யாவரும் மெய்மறந்து உறங்கினர். கேமசரியும் சீவகனும் ஒரு கட்டிலில் படுத்திருந்தனர். காம இன்பத்தால் மனமயங்கி உறங்கினாள் கேமசரி. சீவகன் கேமசரியின் முகத்தை உற்றுப் பார்த்து அவ்விடம் விட்டு அறையின் கதவை மெள்ளத் திறந்தான். சிறிதும் சப்தம் செய்யாமல் இருளில் செல்லும் சூரியன் போல் மாளிகையை விட்டு நீங்கிச் சென்றான்.

கணவன் பிரிந்து செல்வதாகக் கனவு கண்டாள் கேமசரி. உடனே உறக்கம் கலைந்து எழுந்து சீவகனைக்காணாமல் மனங்கலங்கினாள். 'மறைந்து நின்று சீவகன விளையாடுகிறானே' என்று எண்ணிப் பல இடங்களிலும் தேடினாள். அங்கும் அவனைக்காணாமல் 'தன்னைப் பிரிந்து விட்டானென்' றெண்ணி அடங்காத் துயரம் கொண்டாள். ஐயத்துடன் மீண்டும் மாளிகையில் உள்ள ஒவ்வோரிடங்களையும் தேடினாள். வாய்விட்டுப் புலம்பினாள். கேமசரி 'புலம்புவதைக் கேட்டு நிப்புதி அவ்விடம் வந்தாள். சீவகன் ஒருவரும் அறியாமல் பிரிந்து விட்டானென்று அறிந்தாள். "அவன் மீண்டும் வருவான்; கவலைப்படாமல் இரு" என்று கூறிக் கேமசரியை ஆற்றுவித்தாள்.

* * * *

சீவகன் தக்க நாட்டின் எல்லையை நீங்கினான். அவ்வளவில் இருள் நீங்கிச் சூரியனும் உதயமானான். உலகாளும் அரசிளங்குமரனாகிய சீவகன் காட்டின் வழியே மனம் வருந்தாது நடந்து சென்றான்.

அவனுக்கு எதிரில் ஒரு வழிப்போக்கன் வந்தான். அவனுக்குத் தான் அணிந்திருந்த ஆபரணங்களைச் சீவகன் கொடுத்தான். சீவகனுடைய செய்கையைக் கண்ட வழிப்போக்கன் ஆச்சரியம் அடைந்தான்.

"ஐய! நீங்கள் இருப்பது எவ்வூர்? எங்கு வந்தீர்? நுமக்கு மனைவியர் எத்தனைவர்? நும் பிள்ளைகளில் நல்லொழுக்கமுடையவர் எத்துணைவர்? நல்லொழுக்க மில்லாதவர் எத்துணைவர்?" என்று சீவகனை அவன் கேட்டான்,

அவன் கேள்விகள் சீவகனுக்கு வியப்பை உண்டாக்கின. உடனே புன்முறுவலுடன்,

"ஐய! நான் இப்பொழுது இவ்வுடம்பில் உள்ளேன். இவ்வுடம்பை எடுத்தற்குப் போந்தேன். எனக்கு மனைவியர் நால்வர். நல்லொழுக்கமுடைய மகன் ஒருவனே. எனக்கு உள்ளான்" என்று தக்கபடி விடைகூறினான்.

"ஒரு மகன், நான்கு தாய்மாரின் வயிற்றில் பிறந்தானா?" என்று சிரித்து. "நீ நினைத்ததைக் கூறு" என்று அவ்வழிப்போக்கன் மொழிந்தான்.

"ஐய! தானம், சீலம், தவம், கடவுள் பூசனை என்ற நான்குமே முன்பு யான் கூறிய மனைவியர் நால்வர். அந்த நால்வர் வயிற்றிலும் பிறந்த நல்வினையாகிய மகனே நற்கதியைக் கொடுக்கும் மகனாவான்" என்று இன்னும் பல உண்மைகளை எடுத்துக் கூறினான் சீவகன். வழிப்போக்கன் ஆபரணங்களைப் பெற்றவனாய் சீவகனுடைய உபதேசத்தை அறிந்து மகிழ்ந்து சென்றான்.

* * * * *

மனைவியரைப்பிரிந்து பரத்தையரிடம் செல்லும் மாந்தரைப்போல் சீவகன், வயல்கள் நிறைந்த மருதநிலத்தைவிட்டுக் காட்டில் புகுந்தான். காட்டில் சில காதங்கள் சென்றபின் அங்குள்ள சோலையில் புகுந்து சுனை நீருக்கு அருகில் அமர்ந்து இளைப்பாறினான். அவ்விடத்தே பக்கத்தில் அழகுள்ள மங்கையொருத்தி காட்டிலிருக்கும் வனசரிதனைக் காதலித்து நின்றாள். அவள் தன்மையைக் கண்டு 'இவள் இயக்கியோ?' என்று சீவகன் ஐயம் கொண்டான்.

'இம்மங்கை, தன்மீது காதல் கொண்டு நிற்கிறாள்' என்பதை அறிந்த வனசரிதன், அவளுக்கு உடம்பின் நிலையாமை முதலியவற்றை எடுத்துக் கூறினான். "ஐய! என் பெயர் அநங்கமாவீணை; யான் தோழியருடன் விளையாடுகையில் என்னை ஒரு வித்தியாதரன் எடுத்துச் சென்றான். பின்னர், அவனுடைய் கற்புமிக்க மனைவியால் விடுதலை பெற்று வந்துள்ளேன். என்னை நீ தழுவிக்கொள்ளாது போனால் உயிர் துறப்பேன்" என்று அந்த நங்கை கூறினாள். வனசரிதன் அவள் மொழிக்கு இணங்காமல் மீண்டும் அவளுக்கு காமவின்பத்தின் நிலையாமையை எடுத்து மொழிந்தான்.

இந்நிலையில், காட்டின் ஓர் புறத்தே, அநங்கமா வீணையைக் கூவிக்கொண்டே அவள் கணவன் பவதத்தன் புலம்புவதைச் சீவகன் கேட்டான். உடனே எழுந்து சென்று வனசரிதனுக்குப் புத்தி கூறிவிட்டு பவதத்தனிருக்கும் இடம் சென்றான். "அநங்கமா வீணையைக் கண்டதுண்டோ" என்று கூறி அவளைப்பற்றிப் புகழ்ந்து சீவகனிடம் புலம்பினான் பவதத்தன். அவன் அறியாமையை எண்ணிச் சீவகன் இரங்கினான்.

"ஐய! பெண்கள், ஆயிரம் எண்ணமுடையவர்கள். குடிப்பிறப்புக் கெடுமென்று எண்ணார். பத்துப்பொன் காசு கொடுத்தால் கொடுத்தவர்பின்பு இந்திரன் மகளும் செல்வாள்; கவலைப்படாதே. இம் மந்திரத்தைக்கூறி சிறிது தூரம் சென்றால் ஓர் இயக்கி உன் மனைவியைத் தருவாள். பிறகு நீ காண்பாய்" என்று கூறி மந்திரம் ஓதுவித்தான். பவதத்தன் மந்திரத்தை ஓதிச் சிறிது தூரம் சென்றதும் அநங்கமாவீணையைக்கண்டு மகிழ்ந்தான். சீவகன் கூறிய மந்திரத்தால் அநங்கமாவீணை தன் கணவனைக் கண்டதும் வனசரிதனை விட்டுப் பவதத்தனை அடைந்தாள்.

அடுத்த வாரம் :

நீங்காத விலங்கு

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங். Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

ரெக்ஸோனா சரும ஆரோக்கியத்திற்கு

சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றினால் சருமத்தின் அழகையும் காப்பாற்றலாம்

உங்களது சருமத்தில், வெடிப்புகள், கட்டிகள் முதலியவை ஏற்படாமல் காப்பாற்றி சருமத்தை அழகாகச் செய்யுங்கள். சருமத்தைக் காப்பாற்றக் கூடிய இருவித சுத்தம் செய்யும் குணங்களுள்ள உயர்ந்த டாய்லெட் சோப் ரெக்ஸோனாவை இப்பொழுதே உபயோகியுங்கள். ரெக்ஸோனாவில் ஸ்பெஷலாகச் சேர்ந்துள்ள "காடில்" உங்களுக்குப் பாதுகாப்பு.

ரேக்ஸோனா இருவிதத்தில் சுத்தம் செய்கிறது

முதலில் மிக ஆரோக்கியமான முறையில் சுத்தம் செய்து, சருமத்திற்குக் கெடுதியளிக்கக்கூடிய அசுத்தங்களையும் நீக்குகிறது. பிறகு அதில் அடங்கியுள்ள எண்ணெய் சத்துக்கள், தசைகளை கெட்டிப்படுத்தி சருமத்திற்கு சுத்தமும் புத்துயிரும் அளிக்கிறது.

மிகமேல்லிய சருமத்திற்கும் ரேக்ஸோனா சிறந்தது

ரெக்ஸோனா குழந்தைகளுடைய மெல்லிய சருமத்திற்கும் உபயோகிக்கும்படி அவ்வளவு மென்மையானது. அதன் சுகாதார சத்துள்ள நுரை குடும்பத்தில் எல்லோருக்கும் நன்மையளிக்கும்.

காடில்—புண்களை ஆற்றுவதில் சிறந்த பொருள். புண்களை ஆற்றி சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றக் கூடிய "காடில்" என்ற பொருள் சேர்ந்த சோப் ரெக்ஸோனாதான்.

Rexona

சோப்பும் மெழுகும் சரும அழகைக் காப்பாற்றி அதிகமாக்குகின்றன

ரேக்ஸோனா மேழுகு—சொரி, வேர்க்குரு, முதலிய சரும வியாதிகளை ரெக்ஸோனா மெழுகு சொஸ்தப் படுத்துகிறது ஆற்றும் தன்மை இருப்பதால் சருமம் சுத்தமாக இருக்கும்.

RP. 14—169 TM

REXONA PROPRIETARY LIMITED

சென்றவார நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸர் க்ரிப்ஸ் பிரசாரம்

காமன்ஸ் சபைத் தலைவர் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ரேடியோ மூலம் அமெரிக்காவுக்கு ஓர் பிரசங்கம் செய்தார். அதன் ஸாரமாவது:—

நான் எப்பொழுதும் இந்தியாவுக்கு உற்ற நண்பனாகவே இருந்து வந்திருக்கிறேன். இந்திய விடுதலைக்காக முன்பு நான் என்னால் முடிந்ததைச் செய்திருக்கிறேன். நான் யுத்த மந்திரி சபையில் சேர்ந்தபொழுது, இந்திய சுயவாட்சிக்காக ஓர் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று சர்க்கார் கவலை கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் சார்பாகவும், பிரிட்டிஷ் வாசிகள் சார்பாகவும் இந்தியத் தலைவர்களிடம் நேரில் சென்று விஷயங்களைத் தெரிவிக்க நானாகவே இந்தியாவுக்குச் செல்ல முன் வந்தேன். அதனால் 20,000 மைல் பிரயாணத்தை மேற்கொண்டேன்.

தீவிரமான மதபேதங்கள் வேரூன்றி இருக்கும் நிலைமையிலும், சீராக அமைந்த ஆட்சி முறையும், கட்டுப்பாடான நிர்வாகமும் இல்லாத சந்தர்ப்பத்திலும், நாம் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்று காந்திஜி கூறுகிறார். பொறுப்புள்ள எந்த சர்க்காரும் இந்த நடவடிக்கையை கைக்கொள்ள முடியாது. அதுவும் யுத்தம் நடக்கையில் அங்ஙனம் செய்யவே முடியாது குறைந்தது 8-கோடி முஸ்லிம்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 10-கோடி மக்களும, ஹிந்துக்கள் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்க்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சியின் யோசனையையோ அல்லது காந்திஜியின கோரிக்கையையோ ஏற்றுக்கொண்டால் ஒரே குழப்பமே ஏற்படும். இதை நான் சொல்லவில்லை. காந்திஜியே சொல்கிறார், ஒரே வழி "அராஜகம்தான்" என்று சமீபத்தில் காந்திஜி சொல்லியிருக்கிறார்.

அச்சுநாடுகளை எதிர்க்கும் உலக யுத்த முனையில், இந்தியா இப்போது முக்கியமான பகுதியாகும். இந்தியாவை ஜப்பானிய ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்காக நேசதேசத் துருப்புகள் இந்தியாவிலிருக்கின்றனர், அமெரிக்கர்கள், சீனர்கள் ஆகியவர்கள் வசமுள்ளதில் பிரிட்டிஷ் ஸர்க்காருக்கு ஏற்பட்டிருக்கும் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமானால் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்கு இந்தியாவை ஓர் நல்ல தளமாகவிருக்கும்படி செய்யவேண்டும், எனவே நேசநாட்டு படைகள் விமானப் படைகள் இவற்றின் பத்திரத்திற்குப் பாதம் ஏற்படும்படி இந்தியாவில் அரசியல் கட்சிக்கோ, தலைவர்களுக்கோ இடம் கொடுக்க முடியாது. அபாயம் மிகுந்த இப்புதிய யுத்தகளத்துக்குள் எதிரிகள் முன்னேறும்படி விடுவதும் முடியாது: இந்தக்கடமை இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளுக்கு மட்டுமல்ல; இந்திய மக்களுக்கும் அது பொருந்தும். ஆகவேதான் உங்கள் நாடும் எங்களுடைய நாடும் இப்போது இந்தியாவிலுள்ள நிலைமைபற்றி கவலைகொண்டிருக்கின்றன.

ஜப்பானை எதிர்த்துப் போராடி இந்தியாவைப் பாதுகாக்க அமெரிக்கர்களும், பிரிட்டிஷாரும் உதவி செய்கின்றனர். இந்தியாவைப் பாதுகாக்க வேண்டுமென்பது உங்களுடைய கொள்கை; எங்கள் கொள்கையும் அதுவேதான், ஆனால், காங்கிரஸ் கட்சியின் நோக்கம் வேறாக இருக்கிறது.

பெரிய தேசிய வாதி என்ற ஹோதாவிலும் மதத் தலைவர் என்ற முறையிலும் காந்திஜியிடம் எனக்கு எப்பொழுதும் மதிப்புண்டு. ஆனால் இப்போதுள்ள நிலைமையில் அவர் உண்மை நிலையறிந்த அனுபவசாலியாக நடக்கவில்லை யென்பதை நான் எடுத்துக்காட்டவேண்டும், அவர் இப்போது பொது சட்டமறுப்பை ஆரம்பிப்பதாக எச்சரிக்கிறார்.

இதனால் உங்களுடைய யுத்த முயற்சிக்கும் எங்களுடையயுத்த முயற்சிக்கும் கேடு விளையும். இதனால் நமது பொது எதிரிகளுக்கு உதவியும், சௌகர்யமும் ஏற்படும்.

* * * *

யுத்தம் எப்போது முடியும்?

புரொபஸர் இக்னேஷியஸ்டானெல்லி டாபநெக் என்பவர் அமெரிக்காவில் ஒரு பிரபல ஜோஸ்யர். தற்போதைய யுத்தத்தைப்பற்றி இவர் ஜோஸியம் சொல்லியிருக்கிறார். யுத்தம் 1943-ம் வருஷக் கடைசியில் முடிந்துவிடுமென்றும். அச்சு நாடுகள் நன்கு முறியடிக்கப்படுமென்றும் இவர் தெரிவித்துள்ளார்.

நேச நாடுகளுக்குக் கேவலமான முறையில் சில தோல்விகள் ஏற்படுமென்றும், ஆனால் 60 நாட்களில் நிலைமை அவர்களுக்குச் சாதகமாகத் திரும்பி விடுமென்றும் மேற்படி புரொபஸர் கூறியிருக்கிறார்.

யுத்தத்துக்குப் பிறகு ஏற்படக்கூடிய உலக நிலைமையை விவரிக்கையில் மிஸ்டர் டாபநெக் வியாபாரச் சுணக்கம் மிக அதிகமாக இருக்குமென்றும், இப்பொழுதே பொருளாதாரத் துறையில தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால் மேற்படி நிலைமையைத் தவிர்க்கலாமென்றும், ஆனால் அப்படி நடக்குமென்று நம்புவதற்கு இடமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

* * * *

இரண்டாம் போர் முனை

லண்டன் வடமேற்குப் பகுதியிலுள்ள ஏழு யுத்த தளவாடத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 10 தொழிலாளர் பிரதிநிதிகள் டௌனிங் தெருவிலுள்ள பிரதம மந்திரியிடம தூது சென்று ஓர் விஞ்ஞாபனத்தைச் சமர்ப்பித்தார்கள். அதில் உடனே இரண்டாவது போர் முனையை ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தியிருந்தார்கள். இத் தூது கோஷ்டி 4500 தொழிலாளர்களின் பிரதிநிதி என்ற முறையில் பிரதம மந்திரியிடம் சென்றதாக தூதுகோஷ்டி மெம்பர் ஒருவர் தெரிவித்தார். இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதில் தாமதம் செய்தால் தோல்வி ஏற்படுமென்றும் அதை இப்போது ஏற்படுத்தும் பட்சத்தில் இவ்வருஷமே ஹிட்லரை முறியடித்து விடலாமென்றும் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. உற்பத்தியைப் பெருக்கும் விஷயத்தில் தாங்கள் சலிக்காமல் உழைப்பதாயும், இரண்டாவது போர் முனையை வெற்றி பெறும்படி செய்வதாகவும் அவ்விஞ்ஞாபனத்தில் உறுதி கூறப்பட்டிருந்தது.

* * * *

மிஸ்டர் பெவின் வேண்டுகோள்

"இரண்டாவது போர்முனை ஏற்படுத்த வேண்டுமென்று கோஷிப்பவர்கள் ஹிட்லருக்கும், கோயபல்ஸுக்கும் உதவி செய்கின்றனர்" என்று பிரிட்டிஷ் தொழில் மந்திரி மிஸ்டர் பெவின் கூறினர். அவர் (மான் மத்ஷயர்) பிரசங்கத்தில் மேற் சொன்னவாறு கூறினர். மேலும் அவர் தெரிவித்தாவது:—

இம்மாதிரி கோஷம் செய்யும் நமது தீவிர வாத நண்பர்கள் நாட்டில் பிளவுண்டாகுமாறு செய்து எந்த நிலைமை ஏற்படக்கூடாதென்று தடுக்க நாம் விரும்புகிறோமோ அந்நிலைமையே ஏற்படும்படி செய்கிறார்கள்.

ரஷ்யாவின் விசேஷ நண்பர்கள் என்றழைத்துக்கொள்ளுபவர்கள் இப்பிரச்னைக்குப பதில் சொல்லும்படி நிர்பந்திக்காமலிருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன. 2-வது போர் முனை மிகவும் முக்யமானதாகவிருக்குமென்றாலும் யுத்தத்தில் ஜயிப்பதற்கு இதுவொன்றுதான் மார்க்கமென்பதில்லை.

* * *

ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கின

ஜப்பானியக் கப்பல்கள் துருப்புகளை பியுனவில் இறங்கியபோது நேச விமானங்களின் தாக்குதலால் மூன்று எதிரிக் கப்பல்கள் மூழ்கின. எதிரித் துருப்புகளைக் கொண்ட கப்பல் கூட்டத்திற்குப் பல யுத்தக் கப்பல்கள் காவல் புரிந்தன. ஆனல், எதிரிப் படைகள் பெருவாரியாக வந்திறங்கியதாகத் தெரியவில்லை. இதன் மூலம் மார்ஸ்பி துறைமுகத்திற்கு ஆபத்து ஏற்படடிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. நேசக் கட்சியைச் சேர்ந்த பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் ஜப்பானியரை இடைவிடாமல் தாக்கி வருவதாகவும் தெரிகிறது.

நியுகினியில கோனு-பியுனு பகுதியில் நேச விமானக் குண்டு வீச்சால் 5000டன் நிறையுள்ள ஒரு எதிரி எண்ணெய்க கப்பல் தீப்பற்றியது.

ஜப்பானியர் மீது இப்போதுதான் முதன்முதலாகப் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் பிரயோகிக்கப்பட்டதாக. அறிவிக்கப்படுகிறது.

* * *

மோர்ஸ்பிக்கு ஆபத்து

பாபுவாவின் வடகரையில் ஜப்பானியர் இறங்கிவிட்டதாக ஆஸ்திரேலியாவிலுளள நேச தேசத் தலைமைக் காரியாலய அறிக்கையொன்று கூறுகிறது.

அவ்வறிக்கை கூறுவதாவது:- பூனு பூனு—பாபுவாவின் வடகரையில் (நியூகினியில்) நேச தேசபடைகள் ஆக்ரமித்துக் கொள்ளாத ஓரிடத்தில் எதிரிகள் இறங்கினர். வேவுபார்க்கையில் எதிரியின் கப்பல் கூட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. நமது விமானப்படை விடாமல் குண்டுகளைப் பொழிந்தன.

* * * *

எக்ப்துப் போராட்டம்

சென்ற மாத முடிவில் நேச அதிகாரிகள் வெளியிட்ட ஒரு அறிக்கையின் சாரம்:—

23-ந் தேதி நமது துருப்புகள் முதல் நாள் போரில் கைப்பற்றிய நிலையங்களைப் பலப்படுத்தின. வட-மத்திய முனைகளில் நமது பீரங்கிப் படைகளும் ஆயுத மோட்டார் காவல் படைகளும் எதிரிகளைத் தொந்தரவித்தன. தென் முனையில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி எதுவும் இல்லை. நமது விமானங்கள் எதிரி நிலையங்கள் மீதும் மோட்டார்கள் மீதும் குண்டுகளைப் பொழிந்தன. ஐந்து எதிரி விமானங்கள் சுடடு வீழ்த்தப்பட்டன.

மாலடாவில் இரு எதிரி விமானங்கள் நாசம் செய்யப்பட்டன. இந்நடவடிக்கைகளில ஈடுபட்ட நமது விமானங்களில் ஐந்து திரும்பி வரவில்லை. ஆனல, அவற்றின் விமானிகளில் ஒருவர் பதத்திரமாயிருக்கிறார்.

* * * *

"ராமேஸ்வரம் போனாலும்..."

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கெல்லாம் குஞ்சுண்ணி அந்தரங்கமாய், தன் தரவாட்டியையும் தாய் வழியிலேயும் ஏதோ சிக்கல்கள் இருக்கிறதாகவும், அது விஷயமாய்த் தாவா செய்ய வேண்டியதைப்பற்றி யோசனை கேட்டான்.

அவனை அங்கேயே பிடித்து கீழே தள்ளி, நாலு அறை அறைந்து விட்டு நேரா புறப்பட்டு, தொட்டபெட்டா மலே மேலே ஏறி, அதின் சிகரத்து மேலே இருக்கிற இடிந்து போன கட்டிடத்திலே போய் ஒளிந்து கொண்டு இருக்கிறேன். இப்போ அங்கிருந்து தான் பேசறேன். நாலைந்து வாரம்கழித்துபட்டணத்துக்குத் திரும்பி வரலாமென்று இருக்கேன்...அது வரைக்கும் கோர்ட்டு, சட்டம் இது சம்பந்தமாக யாரும் என்னைப் பார்க்க வர வேண்டாம்.

சென்னை ரேடியோ மூலம் சென்ற மாதம் 24-ந் தேதி ஒலி பரப்பப்பட்டது.

பாக்கிஸ்தான் விலை ரூ. 1-8-0
வீரத் துருக்கி .... அணு 4.
தாஜ்மஹால் .... அணு 6..
வி. பி. வேறு.
ஷாஜஹான் புக் டேப்போ, நாச்சியார் கோவில்.

மரப் பெட்டி

சிறுகதை

★

தே. வீரராகவன் எழுதியது

அன்றைக்கு எழும்பூர் ஸ்டேஷனில் 'ஜே! ஜே!' என்று ஒரே ஜனக்கூட்டம். பட்டணமே அங்கு திரண்டு வந்துவிட்டது என்னலாம். சகல வகுப்பாரும், எல்லாவித அந்தஸ்துடையவர்களும், பல ரக வயதுடையவர்களும், தங்களுக்குள் ஒருவித வித்தியாசமும் காட்டிக் கொள்ளமாட்டாமல், தங்களால் சுமக்கக்கூடியவைகளையெல்லாம் தூக்கிக்கொண்டு குடுமி அவிழ, உடை நழுவ; பூ உதிர, புடவை புரள ப்ளாட்பாரத்தில் இங்குமங்கும் ஓடுகிறார்கள். ஒவ்வொரு பெட்டியின் வாயிலும், வண்டியினுள் நுழைவதற்காக ஒரு தேவாசுர யுத்தம் நடக்கிறது: நல்ல காலம்! நான் மட்டும் இந்த ரகளையை எதிர்பார்த்தே இரண்டு மணி முன்னலேயே வந்துவிட்டபடியால் சுலபமாக ஓர் இடத்தைத் தேடிப் பிடிக்க என் சாமான்களை வைத்துக்கொண்டு உட்காரவும் இடம் செய்துகொண்டேன். இரவு மணி பத்து: வண்டி புறப்பட இன்னும் ஒரே நிமிஷம் இருக்கிறது இந்த வண்டிதான் அன்றைய தினம் தெற்கே போகும் வண்டிகளில் கடைசி. மேகத்தினிடையே மின்னல் பூத்தமாதிரி, ஒரு சுந்தரி—வயது பதினெட்டுக்கு மேலிருக்கலாம், ஆனல் இருபதிருக்காது: போதுமான உயரம்: உயரத்துக்குத் தகுந்த உடல் காத்ரம்; மரகதக் கொடியில் இஙகொன்று அங்கொன்று பூ பூத்திருப்பதுபோல் இரண்டொரு அவசியமான நகைகள், இருவித நாகரிகங்களும் இணைந்த சாயல்; அழகுத் தேவதையின் வார்சு என்று கூடச்சொல்லலாம்—முன்னல் இரண்டு கூலிகள் சிலப் பெட்டிகளைச் சுமந்துவரப் பின்னல் ஒரு கையில் பிடில் பெட்டி ஒன்றையும் மற்றொரு கையில் வெள்ளிக் கூஜா ஒன்றையும் எடுத்துக் கொண்டு அவசரம் அவசரமாக ப்ளாட்பாரத்தில் நுழைந்தாள். ஐநூறு பேர் ஏறுவதற்கென்று ஏற்பட்ட நம் எஸ். ஐ. ஆர் வண்டி என்றைக்கும் ஐயாயிரம் பேருக்கு இடமளித்துக் கருணைக் காட்டக்கூடியது. அன்றைக்கு இந்த யுவதிக்கு இடம்கொடுக்கத் தகராறு செய்தது. பாவில் குழல் ஓடுகிறமாதிரி கூலிகள் தான் தொடர இங்குமங்கும் ஓடுகிறாள் பாவம்! ஆஞ்சநேயரின் சாக்ஷாத் சந்ததிதாமென்று காட்டிக்கொண்ட பலபேர் ஒவ்வொரு பெட்டியின் வாயிலையும் ஈக்கூட நுழைய முடியாதபடி முற்றுகையிட்டிருந்தார்கள். புறப்படப்போகிறேன், என்று என்ஜினும் எச்சரிக்கை செய்தது. 'கார்டும்' பச்சை விளக்கைக் காட்டிவிட்டார். ப்ளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்த ரயில்வே வேலைக்காரர்கள் 'உள்ளேபோ!' உள்ளே போ!, என்று கதவருகில் நின்றுகொண்டிருந்தவர்களை உள்ளே தள்ளுகிறார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் தவியாய்த் தவிக்கும் அப்பெண்ணைப் பார்த்த என் கண்கள் சில துளி நீரைக்கூட அவளுக்காகச் செலவு செய்தன. இந்த மோகினியை ஏற்றிக்கொண்டு செல்லும் பாக்கியத்தை இழக்கப் போகும் அந்த வண்டியின் துரதிருஷ்டத்தைக் குறித்துப் பரிதாபப்பட்டேன். அவளுக்கு எப்படி உதவலாம் என்று குழம்பிக்கொண்டிருந்த என் மூளையில் மின் வெட்டுமாதிரி ஒரு யோசனை உதித்தது. கையைத் தட்டி அந்தக் கூலிகளைக் கூப்பிட்டு அவர்களிடமிருந்த சாமான்களை யெல்லாம் வாங்கி என் சாமான்களின் மீதும், பெஞ்சியின் எதிரிலும் வைத்தேன். இதற்குள் வண்டியும் இரண்டு மூன்றடி தூரம் நகர்ந்து விட்டது. திகைத்து நிற்கும் அந்த அழகியைக் கூப்பிட்டு "இப்படி வந்து உங்கள் கைகளை நீட்டுங்கள். இந்த ஜன்னல் வழியாகவே உங்களை உள்ளே தூக்கிக் கொள்கிறேன்" என்று முன் பின் யோசிக்காது சொன்னேன். அவளும் யோசிக்காமல்-அவசரத்தில் ஆலோசனைக்கு இடமேது?-தன் கைகளைக் கொடுத்தாள். வண்டியுடன் ஜன்னலுக்கு வெளியே நடந்து வரும் அவளை, சினிமாவில் ஒரு காதலன் தன் காதலியை கைலர்குக் கொடுத்துத் தாங்குவதைப்போல் வெகு லாகவமாக ஜன்னலின் வழியாகத் தூக்கி நான் உட்கார்ந்திருந்த இடத்தில் உட்கார வைத்து விட்டுக கீழ் பார்வையாக அவள் முகத்தைப் பார்த்தேன். நன்றி கூறும் முறையில் அவள் கண்கள் பிரகாசித்தன. இதற்குள் வண்டி பத்துப் பன்னிரண்டடி ஓடியிருக்கும். கூலிகள் "அம்மா! கூலி! கூலி" என்று கத்திக் கொண்டே ஜன்னலைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள். அவளை நான் முந்திக் கொண்டு என் சட்டைப் பையில் கையை விட்டு ஒரு ரூபாய் நாணயத்தை அவர்களிடம் எறிந்து விட்டு உட்கார இடம் தேடினேன். என் கருத்தைத் தெரிந்து கொண்ட அவள் தன் உடலைக் குறுக்கிக்கொண்டு தன் பக்கத்தில் உட்கார இடமளித்தாள், (இன்று அவள் அளித்த இடம் என்றும் சாஸ்வதமாகக் கிடைக்குமா?) அப்பொழுது என் ஹிருதயத்துடன் அவள் ஹிருதயம் ஒட்டியதோ என்னவோ? அது எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. ஆனல் அவள் உடல் என்னுடலுடன் ஒட்டிக் கொண்டதென்னவோ நிச்சயம்.

வண்டி வேகமாக ஓடக் காற்றும் வேகமாக அடித்தது தன்னை இதற்குள் ஒருவாறு ஆஸ்வாசப்படுத்திக் கொண்ட அவள் என்னை நோக்கி, "நீங்கள் இந்த உபகாரம் செய்திரா விட்டால்..."என்று கூற வாயெடுத்தாள். அவளைத் தடுத்து "அதிகம் ஒன்றும் சொல்ல வேண்டாம். என்ன பிரமாதமாக நான் செய்து விட்டேன். இது கூடச் செய்யாத ஜன்மம் எதற்கு?" என்று கூறி, அவளுககாக எவ்விதச் சிரமப்படுவதும் பெரிதல்ல என்ற என் கருத்துப் புலப்படும்படி கூறினேன்.

"என்ன இருந்தாலும் நீங்களில்லாவிடில் இன்றைக்கு நான் வண்டி ஏறியிருக்கவே முடியாது..." என்று பல விதமாக அடுக்கிக் கொண்டும் என்னை இடையிடையே ஸ்தோத்தரித்துக் கொண்டும் போனாள்.

அவளுடன் பேசுவதே எனக்கு ஸ்வர்க்கபோகம். அவள் பேச்சினல் என் வாலிப தேகத்தின் முருக்குத் தளர்ந்து குழைய, விவரிக்க முடியாதது ஓர் இன்பம் என் உள்ளத்தில் பற்றியது. ஏதாவது சில சொந்த விஷயங்களைக் கேட்கலாமென்றால், பக்கத்திலும் எதிரிலுமிருந்த அந்த சனியன் பிடித்த மனிதர்கள் எங்களையே கவனித்துக்கொண்டிருந்தார்கள். ஆனலும் அவளுடன் பேச வேண்டுமென்ற தாகம் மட்டும் தணியவில்லை. மறுபடியும் பேச்சை ஆரம்பித்து,

"எந்த ஊருக்குப் போகிறீர்களோ?" என்றேன்.

"சுந்தரப்பெருமாள் கோவிலுக்கு" என்றாள்.

"ஓ! ஹோ! அப்படியா? நான் தஞ்சாவூருக்குப் போகிறேன்" எனறேன். "ரொம்ப நல்லதாய் விட்டது. காலை ஆறு மணிவரையில் உங்கள் சாகவாசம் கிடைக்கும்" என்றாள். இந்தக் கடைசி இரண்டு வாக்கியங்களின் ரகஸ்யார்த்தம் முழுவதையும் அப்பொழுது என்னல் அறிந்து கொள்ளக் கூடவில்லை. மனதில் பல பல யோசனைகள் எழும்பி மோதியதால் என்னல் மேலே பேச முடியவில்லை.

அவள் சரீர ஸ்பர்சம் பட்டதால் ஏற்பட்ட இன்ப வெறியில் தடுமாற்றமடைந்திருந்த நான், பாகுக் கம்பிபோன்ற அவளது சன்னமான சொல்லினிமையில் என்னையே மறந்து அவளை உற்று நோக்கினேன். அவளும் என்னை விழி விழுங்கப் பார்த்தாள். என் பார்வையில் அவள் என்ன கண்டாளோ எனக்குத் தெரியாது. ஆனல் அவள் பார்வையில் என் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இரவு ஆக ஆக எங்களுக்குள் வார்த்தைச் சம்பாஷணை சுருங்கிற்றேனும் நயன சம்பாஷணை மட்டில் நடந்து வந்தது. அவளை நான் பாராதபோது அவள் என்னைப் பார்ப்பது; அவள் என்னைப் பாராதபோது நான் அவளைப் பார்ப்பது என்ற கர்நாடகக் காதலர் சம்பிரதாயத்தை நாங்கள் பின்பற்றாமல், இயற்கைக் காதலர்களாக ஒருவரையொருவர் பூர்த்தியாகப் பார்த்துக் கொண்டோம். நள்ளிரவு. ஒரு மணி தாண்டியிருக்கும். உறக்கப் போர்வை கொஞ்சம் கொஞ்சமாக எங்களை மூட, உட்கார்ந்தபடியே சற்றுக் கண் மூடினோம். ஒருவரையொருவர் பிரியுமுன் அவள் என்மீது இரு முறை தூங்கி விழுந்ததையும், நான் அவள் மீது பொய்த் தூக்கம் தூங்கி மும்முறை விழுந்ததையும் சொல்லிக் குதூகலமடைந்தோம். எஸ். ஐ. ஆர் வண்டிக்கு சொந்தமான ஆட்டம்தான் இதற்கு காரணம் என்று அதன் மீது அவள் பழி சுமத்தினன். ஆனல் என் மனமார்ந்த நன்றியை அது அபகரித்துக்கொண்டதை நான் அவளிடம் அப்பொழுது கூறவில்லை.

விடியற்காலை மணி ஆறு. சுந்தரபெருமாள் கோவில ஸ்டேஷன் வர இன்னும் இரண்டு மைல் இருக்கிறது. ஐந்து நிமிஷத்துக்குள் வண்டி ஸ்டேஷனுக்குப் போய்விடும். உட்கார்ந்தே உறங்கிக்கொண்டிருந்த ராதா(பி.ஏ-யை)வை-அதுதான் அவள் பெயர், பிடில் பெட்டி மீது, எழுதியிருந்தது—எழுப்பி "வரும் ஸ்டேஷன்தான் சுந்தரபெருமாள் கோயில்" என்றேன்.

"ஓ! ஹோ! தூங்கிவிட்டேன். வண்டி அந்த ஸ்டேஷனில் அதிக நேரம் நிற்காது. தயவு செய்து சாமான்களை ஏற்றினபடியே இறக்கியும் கொடுக்க வேண்டும். சிரமத்துக்கு மன்னிக்க வேண்டும்," என்றாள். அவசியம் நேரும் பொழுது என் உடலையே அவளுக்காக அர்ப்பணம் செய்ய சங்கல்பம் செய்து கொண்டுள்ள எனக்கு அவள் வார்த்தைகள் அநாவசியமாக மட்டில்லல, ஓரளவு துன்பத்தையும் கொடுத்தன. "அதிகம் ஒன்றும் சொல்ல வேண்டாம்" என்று மட்டில் பதில் சொன்னேன்.

இதற்குள் வண்டியும்ஸ்டேஷனில் வந்து நின்றது. ராதா வண்டியினின்றும் இறங்கினாள். நான் சாமான்களையெல்லாம் எடுத்துக்கொடுத்தேன். அவசரம் அவசரமாக வாங்கிவைத்துக்கொண்டாள். அதற்குள் நேரமாகி விட்டது. ஸ்டேஷன் மாஸ்டர் "ரைட்" கொடுத்தார். வண்டி நகர்ந்தது.

"போய்வருகிறீர்களா? ஞாபகமிருக்கட்டும், மறக்கக்கூடாது. நமஸ்காரம்" என்று கைகூப்பினாள். இந்த வார்த்தைகளைச் சொல்லும்பொழுது அவள் தொண்டை அடைப்பட்டதையும் நாக்குக் குழறியதையும் கண்களைத் தண்ணீர்ப்போர்வை மூடியதையும் நான் காணமல் இல்லை. சோகப்படம் சித்தரித்த என் முகத்தையும் கைத்துண்டை எடுத்து என் முகத்தை நான் துடைத்துக்கொண்டதையும் அவள் பாராதிருக்க முடியாது. அவள் உருவம் ஒரு கறும் புள்ளியாக மாறும் வரையில் ஜன்னலின் வழியாக நீட்டிப் பார்த்துக்கொண்டிருந்த தலையை நான் எடுக்கவேயில்லை.

ஒரு சிங்கார நந்தவனம். அதன் மத்தியில் வெண்ணெய்ச் சுண்ணாம்பினல் நவீன முறையில் கட்டப்பட்ட ஒரு அற்புதமான பங்களா. எல்லா வசதிகளும் நிறைந்தது. சிருஷ்டியின் ஜாலங்களை பங்களாவைச் சுற்றி

எங்கும் காணலாம். பங்களாவுக்குக் கிழக்கே கூப்பிடு தூரத்தில் கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லும் மரங்களடர்ந்த சாலை. தெற்கே பங்களாவை முத்தமிட்டுக்கொண்டு வளைந்து நெளிந்துசங்கீதமிசைத்துக்கொண்டே செல்லும் காவிரிச் செல்வி மேற்கிலும் வடக்கிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் பூமிதேவிக்கு மரகதத் தாவணி போர்த்த மாதிரி காட்சி தரும் பசுமையான நெல் வயல்கள். இந்த இந்தரபோகத்துக்கு ராணி நம் ராதா ஒருத்தியே. ஆயினும் ஊருக்கு வந்த இரண்டு தினங்களாய் அவளுக்கு மன அமைதியேயில்லை, உண்பதாகவும், உறங்குவதாகவும் அவள் காட்டிக்கொண்டதெல்லாம்வெறும் பாவனைதான். தான் கொண்டு வந்த சாமான்களைச் சரி பார்க்கவுமில்லை; ஒழுங்குபடுத்தி வைக்கவுமில்லை, இதற்கு முன் எத்தனையோ ஆள்களைப் பார்த்துப் பேசி அவர்களுடன் பழகியுமிருக்கிறாள். அவர்களுள் ஒருவராலும் அபகரிக்க முடியாத அவள் மனம் ஏனோ கிருஷ்ணனையே சுற்றிச் சுற்றி உழன்றுகொண்டிருந்தது. அப்படி அழகில் சிறந்தவனாகவும் கிருஷ்ணனில்லை. அப்படியிருந்தாலும் அழியும் அழகுக்கு ராதா அடிமையுமில்லை, பணம் பதவி, படிப்பு இவைகளில், கிருஷ்ணன் ராதாவுடன் எந்தக் காலத்திலும் போட்டி போடவும் முடியாது. முன்பின் அறியாத அந்தஸ்து மாறுபட்ட இரண்டு பேர்களிடையே ஒரு பாசக்கனலை எழுப்பி அதனால் அவர்கள் அடையும் அவஸ்தைகளைக் கண்டு மகிழ்வதில் சிருஷ்டிகர்த்தா தன் கையலுப்பை மறக்கிறான் போலும்! மனோவேதனை ராதாவைத் தின்கின்றது. கிருஷ்ணனும் ராதாவைப் போல் அவஸ்தைப்படவில்லையென்று யாரால் சொல்ல முடியும்?" ஏதாவதொரு சாக்குக் காட்டி அவளுக்குக் கடிதம் எழுதலாமென்றால், பாவி, அவர் விலாசத்தைக் கேட்டுக்கொள்ள மறந்துவிட்டேனே" என்று தவியாய்த் தவிக்கிறாள் ராதா. அவள் படும் வேதனையை அறிந்துகொண்டவர்கள் மையடர்ந்த இரவும், சீறும் தென்றலுமே,

ராதா ஊருக்கு வந்த மூன்றாம் நாள். மாலை மணி மூன்றிருக்கும். மாடியில் காவிரியைப் பார்த்து நிற்கும் அறையொன்றில் கட்டிலில் படுத்துப் புரண்டுகொண்டிருந்தவள் திடீரென்று கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையைப் பார்த்தாள்: தன் பங்களாவுக்கு வரும் வழியில் ஒரு குதிரை வண்டி நிற்பதையும், அதிலிருந்து ஒரு ஆண் இறங்கிக் கையில் ஒரு மரப் பெட்டியுடன் பங்களாவுக்கு வருவதையும் கண்டாள். முதலில் திகைப்பு; அந்த உருவம் பங்களாவை அணுக அணுக அது தன் மனக் கோயிலில் செதுக்கப்பட்டிருக்கும் உருவம் தான் என்று புலப்படவும், எங்கிருந்தோ ப்ரளய வேகம் போன்று ஒரு ஆனந்தம், பரபரப்பு அவளிடம் பொங்கியது. மாடியிலிருந்து விழுந்தடித்துக் கொண்டு இறங்கி அவன் எதிரே ஓடி, "நமஸ்காரம்! வரவேண்டும்; வரவேண்டும்; இன்று சுதினம்" என்று வரவேற்புக் கூறி மாடிக்கு அழைத்துச்சென்று ஒரு ஸோபாவில் உட்காரவைத்தாள். ராதாவின் ஒவ்வொரு பேச்சிலும், நடையின் அசைவிலும் கட்டுக்கடங்காத அவள் காதலும், உண்மையும் ததும்பின. எதிர்பாராத இச்சந்திப்பு ஏற்பட்ட அந்தக் காலத்தில் அவரவர் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த உணர்ச்சியை கபடமற்ற அவர்கள் கண்கள் வெளிப்படுத்தியதை அவர்கள் தத்தம் முழுச் சாமர்த்தியத்தையும் கொண்டு மறைக்கப் பிரயத்தனப்பட்டும் முடியவில்லை. சற்று நேரம் ஊமைமாதிரி உட்கார்ந்திருந்த கிருஷ்ணன் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "உம்......ஒன்றுமில்லை...அன்றைக்கு உங்கள் சாமான்களை யெல்லாம் எடுத்துக்கொடுத்த அவசரத்தில் இந்த மரப் பெட்டியையும் எடுத்துத்தர மறந்துவிட்டேன். என் சாமான்களுடன் இது கலந்துவிட்டதை இன்று காலையில் தான் கண்டேன். அதைக் கொடுத்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். அவசரத்தில் நேர்ந்துவிட்ட குற்றத்தை மன்னிக்க வேண்டும்" என்றான். அப்பொழுது அவன் பேச்சிலும் முகத்திலும் அசட்டுத்தனம் வழிந்து, உண்மையான காரணம் அது அல்ல என்று காட்டியது.

"இப்படி நீங்கள் சொல்வது என்னைக் கொல்லாமல் கொல்கிறது. மன்னிப்பதற்குப் பதிலாக உங்களை இன்று முதல் பூஜிக்கப்போகிறேன். என் வாழ்வை இரண்டு வீதத்திலும் காத்தவர் நீங்களாகிவிட்டீர்கள், இந்த மரப்பெட்டி உங்களைத் தவிர வேறு யாரிடமாவது கிடைத்திருந்தால் அத்துடன் என் வாழ்வுக்கு முத்திரையிட்டுவிட வேண்டியிருந்திருக்கும். நல்லவேளை! இது உங்களிடம் தங்கி விட்டது......நானும் என் சாமான்களை இன்னும் சரி பார்க்கவில்லை."

"அவ்வளவு முக்கியமான பெட்டியை இப்படிக் கவனிக்காமலிருக்கலாமா?" "நான் கவனிக்காமலிருந்ததாகிய சிறிய குற்றம் தான் இப்பொழுது என் வாழ்வையே ஊன்ற வைக்கும் பெரும் உபகாரத்தைச் செய்யப் போகிறது. இதைக் குறித்து ஒரு சிறு வரலாறு இருக்கின்றது. இந்த மரப்பெட்டி என் தகப்பனாருடைய பாட்டனாருக்குச் சொந்தமானது. அவர் பரம ஏழை. ஆனால் சிவநேசச் செல்வம் ஏராளமாகப் படைத்தவர், இந்த மரப் பெட்டியில் தான் அவர் குல தனமாகிய சிவலிங்க மூர்த்தி கோயில் கொண்டிருந்தார். ஒரு முறை அவர் வீடு தீப்பற்றிச் சாம்பலாயிற்று. ஆனால் தெய்வாதீனமாய் இம் மரப் பெட்டி கொஞ்சம் கூடப் பழுதாமல் அப்படியே இருந்தது. அந்த தெய்வத் தன்மையை உத்தேசித்து, எங்கள் ஆஸ்தியைக் காட்டும் பாண்டு பத்திரங்களையும் இதிலேயே வைத்துப் பாதுகாத்து வருகிறோம். இன்னும் ஒன்று. அது நம் சம்பந்தப்பட்டது. இனியும் நான் விஷயத்தை ஒளிப்பேனாகில் தற்கொலை செய்து கொண்டவளாவேன். உங்களை அன்று கண்டது முதல் என் மன நிம்மதி போய் விட்டது. இப்பொழுது தான் என் உள்ளக் குமுறல் நின்றது. உங்களைக் கண்டவுடன் நிஷ்காரணமாக என் மனதில் அரும்பிய காதலும், அதன் பின் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் என் வாழ்வு உங்கள் நிழலில் தான் இருக்கின்றது என்றது உண்மையைக் காட்டுகின்றன. என் எதிர் காலத்தை நிர்ணயிக்க வேண்டியவள் நான் ஒருத்தியே தான். எனக்குத் துணையாயிருந்த என் தகப்பனாரும் சுமார் 20 தினங்கட்கு முன்னர் தான் சென்னையில் இறந்து போய் விட்டார். இவ்வூரிலுள்ள அவரது சொத்துக்களுக்கும் சென்னையிலுள்ள சைகில் கம்பெனிக்கும் நான் தான் முதலாளி. இவ்வளவும் இனி உங்கள் அடைக்கலமே" என்று தன் மனக்கடலை கடகட வென்று உடைத்து வெளி விட்டாள் ராதா.

சிந்தனைச் சுழலில் அகப்பட்ட கிருஷ்ணன் உட்கார்ந்தவன் உட்கார்ந்தவனாகவே இருந்தான். தான் வேலை பார்த்து வரும் சைகில் கம்பெனியின் முதலாளியான சீதா ராமையரின் பெண் தான் ராதாவென்று அவனுக்கு அப்பொழுது தான் தெரிந்தது. தன் எதிரில் நடப்பன வெல்லாம் நினைவாக இருக்க முடியாதென்று பல முறைகள் நினைத்தான். அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக அடங்கவும் நிதானம் தலையெடுத்தது. உண்மை வெளிச்சமாயிற்று. அதிர்ஷ்ட தேவதையின் கருணையை வியந்தான்.

ஆனந்தக்கடலின் ஆழத்தைப் பத்து தினங்களாக அளந்துகொண்டிருந்த கிருஷ்ணன் ராதாவுடன் சென்னைக்குப் புறப்பட்டான். எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து ஒரு டாக்ஸியில் ராதாவும் தானுமாகத் தம் கம்பெனிக்குச் சென்றார்கள். கம்பெனி மானேஜர் கணேச முதலியாருக்குக் கிருஷ்ணன் மீது அடங்காத கோபம்: இரண்டு நாள் லீவ் வாங்கிக்கொண்டு பனிரெண்டு நாட்கள் தங்கிவிட்டு வரும் பொறுப்பில்லாத குமாஸ்தாவை வைத்துக்கொண்டு அவர் என்ன செய்வார் பாவம்! போதாக்குறைக்கு ஆபீஸுக்குள் ஒரு பெண்ணும் கூட. முகத்தில் வீரபத்ரஸ்வாமி கூத்தாட, ஏற்கனவே டைப் அடித்துத் தயாராக வைத்திருந்த "டிஸ்மிஸல் ஆர்டரை" க்கிருஷ்ணனிடம் கொடுத்தார். அதை வெகு அலக்ஷியமாக வாங்கிப் படித்துக்கொண்டே கிருஷ்ணன் தன் சட்டைப் பையில் கையை விட்டு ஒரு காகிதத்தை எடுத்துக் குறும்புச் சிரிப்பு சிரித்துக்கொண்டே மானேஜரிடம் நீட்டினான். பல முறை தம் மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டு. திருப்பித் திருப்பி, கிருஷ்ணன் தன் கம்பெனியின் முதலாளி யாக்கப்பட்டிருக்கும் சாஸனத்தைப்படித்தார் கணேச முதலியார். கிருஷ்ணனையும் ராதாவையும் பார்த்துக் கூப்பிய கையை இன்னும் எடுக்கவில்லை; பிளந்த வாயையும் மூட வில்லை. எல்லாம் அந்தமர பெட்டிதான்!

பரிமளக் கூந்தல் தேங்காயெண்ணெயைத் தடவுங்கள்

டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூவால் கேசத்தை அலசி ஸ்நாநம் செய்யுங்கள்.

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா: 1, வாரன் ரோட், பீமன் பேட், மைலாப்பூர், மதராஸ்.

தயாரிப்போர்:- தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமி., டாடாபுரம் & பம்பாய்.

T H. 2364

தேவை

முதல் எதுவும் போடாமல், ஒய்ந்த நேரத்தில் தங்கள் இடத்திலேயே மாதம் ரூ. 100/-முதல் ரூ. 300/-வரை சம்பாதிக்க விரும்பும் ஸ்திரீ, புருஷர்கள், பூரா விவரங்களுக்கும் எழுதவும்.

LONDON COMMERCIAL CO.,
Post Box 165, (S. M. W.) LAHORE (India)
(E A B)

பண்டைக்காலப் போர் முறை

வெற்றி

தி. நா. சுப்ரமண்யம்
எழுதியது

பண்டைக் காலத்துப் போர்களில் அவற்றுள் சம்பந்தப்பட்டவர்கள் போர் நடக்கும் காலத்தில் படும் கஷ்டங்களை விடப் போரில் தோற்றுவிட்டால் அப்பால் அனுபவிக்க நேரிடும் துன்பங்களே அதிகமாக இருக்கும்; அதனால் அவர்கள் போரில் வெற்றி கொள்ளுவதற்காகத் தங்களால் கூடிய வரையில் முயற்சி செய்வார்கள்.

மனம் சலித்துப் போரில் சளைக்கும் வீரர்களுக்கு அடிக்கடி உற்சாக மூட்டி அவர்கள் மனத்தில் தைரியத்தை உண்டாக்கி அஞ்சாநெஞ்சத்துடன் சண்டை செய்யத் தூண்டுவர். அதற்காகப் பல சமயங்களில் வாக்குவன்மை உடையவர்களைக் கொண்டு வீரர்களுக்கு உபதேசங்கள் செய்வர். அத்தகைய உபதேசிகள், பெரும்பாலும் அரசாங்கத்தில் உயர்ந்த உத்யோகம் வகிப்பவர்களாகவோ நல்ல ஆசார சீலமுடைய பிராமணர்களோ இருப்பர். அவர்கள் போர் வீரர்களுடைய மனோபாவத்தை நன்றாக உணர்ந்து அவர்கள் மனத்தில் நன்றாகப் பதியும்படி ஏற்ற விஷயங்களைக் கூறிப் போரில் வெற்றி பெறும்படியாகச் சண்டையிடும்படி, வற்புறுத்துவர். போரில் தோற்க நேரிடின் அதனால் தேசத்துக்கும், மதத்துக்கும், அவர்களுடைய பெண்டு பிள்ளைகளுக்கும் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை விவரித்துக் கூறி அவர்கள் மனத்தை உறுதிப்படுத்துவர்.

ரணகளத்துக்குச் செல்லும் வீரர்கள் அங்கே நடக்கும் கோரமான காட்சிகளைக் கண்டு மனந் தளராமல் இருக்க அவர்கள் அந்தச் சமயங்களில் மனித உணர்ச்சியை இழந்தவர்களாக இருத்தல் அவசியம். அதற்காகப் பல சமயங்களில் அவர்களுக்கு நல்ல போதையைக் கொடுக்கக் கூடிய மதுபானத்தை வழங்குவதும் உண்டு.

வீர ஸ்வர்க்கத்தில் ஆசை

முற்றுகை நடக்கும் காலங்களில் கோட்டைக்குள் இருப்பவர்கள் தங்களால் இனிக் கோட்டையைக் காக்க முடியாது என்பதை யறிந்தவுடன் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள எதிரிகளிடம் சரண் புகும் வழக்கம் பெரும்பாலும் பண்டைக் காலத்தில் கிடையாது. அவர்கள் தங்கள் உயிரைத் துரும்பாக மதித்துத் தீரத்துடன் போர் புரிந்து வீர சுவர்க்கம் அடையவே பார்ப்பர்.

எனினும் சில சமயங்களில் அவர்கள் போர் புரிவதை விட்டு கோட்டையைக் காலி செய்து தப்பி வெளியேறிவிடுவார்கள். வெளியே போய் வேற்றிடங்களிலிருந்து கொண்டு எதிரிகளைத் தாக்கி முறியடிப்பதற்கான தந்திரமாகவே அதை உபயோகித்து வந்தனர்.

கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் இவ்விதம் நேரிட்ட நிகழ்ச்சி ஒன்றைப்பற்றி 'ராயவாசகமு' என்னும் நூல் விவரமாகக் கூறுகின்றது. கிருஷ்ணதேவ ராயர் அஹமத்நகரை முற்றுகையிட்டு நகர்ப்புறத்தைச் சுலபமாகக் கைப்பற்றிவிட்டார். கோட்டைக்கு வெளியிலே குதிரைப் படையுடன் மும்முரமான போர் நடந்தது. சிறிது காலத்துக்குள்ளேயே எதிரிகளின் குதிரைப்படையில் இரண்டாயிரத்து எண்ணூறுக்கு மேல் அழிந்துவிட்டன. ராயருக்கு வெற்றி கிட்டியது.

கோட்டைக்குள்ளிருந்தவர்களோ இனி முற்றுகையைத் தாங்க முடியாது என்பதை உணர்ந்தனர். விஜயநகரத்துச் சேனை அலை அலையாக முன்னேறிக் கோட்டையைத் தாக்கி வந்தது. அதனால் உள்ளிருந்தவர்கள் வெளியே முற்றுகையிட்டிருந்தவர்கள் அறியாமல் கோட்டையைக் காலி செய்து வெளியேறி உள்நாடு சென்றுவிட்டனர். அப்பால் அவர்கள் அங்கிருந்து சண்டையை நடத்தி வந்தார்கள்.

கொள்ளையும் கொலையும்

வெற்றி கொண்டவர்கள் தோல்வியுற்றவர்களது நாட்டில் புகுந்து பலவிதமான அக்கிரமங்களைப் புரிவது வழக்கமாகவே இருந்தது என்று கூறலாம். தர்ம யுத்தத்தில் அவ்விதம் செய்வது கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தும் அநேகமாக அது அநுபவத்தில் இல்லையென்றே கூறலாம்: நீதியைக் கடைப்பிடித்து நாட்டைச் சூறையாடாமல் சென்றவர் கொஞ்சம் பேர்களே.

மத்திய காலங்களில் படையில் சேர்ந்தவர்களில் பலர் இந்தக் கொள்ளையை எண்ணி அதனால் ஆசை கொண்டவர்களே யாவர். ஒரு நாட்டையோ கோட்டையையோ கைக்கொண்டவன் வெற்றி பெற்றவர்கள் உள்ளே புகுந்து இஷ்டப்படிக் கொள்ளையடிப்பர். அது ஒரு நாள் இரண்டு நாள் இடை விடாமல் நடக்கும். அப்பொழுது ஒன்றும் அறியாதவர்களில் பலர் கொலையுண்டு இறப்பது சகஜம். போர்வீரர்களுக்குக் கையோய்ந்து வெறி அடங்கிய பின்னரே இக்கொள்ளையும் கொலையும் நிறுத்தப்படும்.

கோட்டை கொத்தளங்களை இடித்துத் தரை மட்டமாக்குவர். அவை மறுபடியும் மூளைத்தெழா வண்ணம் அழிக்கவேண்டிக் கழுதையைக் கட்டி உழுது, ஆமணக்கு பருத்தி முதலியவற்றை விதைப்பர். உப்பை வாரி இறைப்பதும் உண்டு. தெருக்களையும் உழுது வெட்டி நாசம் செய்து விடுவர். இத்தகைய பழக்கம் சமீபகாலம் வரைக்கும் இருந்திருக்கிறது.

பலசமயங்களில் தெய்வ சந்நிதானங்களும் இவர்களுடைய வெறிக்குத் தப்புவதில்லை. வெற்றிகொண்ட மன்னன் அனுசரிக்கும் மதத்தினின்றும் வேறான மதத்தைச் சார்ந்த கோயில்களை அவர்கள் இடித்துத் தள்ளிவிடுவார்கள்.

போர்க்காலங்களிலே, யுத்தம் செய்யாதவர்கள், வேதம் உணர்ந்த அந்தணர், பெண் மக்கள், பிணியாளர். வயது முதிர்ந்தவர்கள், பிள்ளை இல்லாதவர்கள், மிருகங்கள் முதலியவர்களை யுத்தரங்கத்துக்கருகே வைத்திருக்கமாட்டார்கள். சண்டை ஆரம்பிக்குமுன்னரே அவர்களை அப்புறப்படுத்திவிடுவார்கள், அன்றி, தவறி அவர்கள் அங்கே தங்கிவிட்டாலும் அவர்களை ஒன்றும் செய்யக்கூடாது என்று பழைய நீதி நூல்கள் கூறுகின்றன. அதேபோல போரில் புறங்காட்டிச்செல்பவன், பிள்ளையில்லாதவன், நபும்ஸகன், ஆயுதமற்றவன், தலைவிரித்து ஓடுபவன் ஆகியவர்களையும் தாக்கக் கூடாது என்றும் சொல்லுகின்றன.

"வித்தியாசம் இருந்ததில்லை"

அவை எட்டளவிலேயே இருந்து வந்தன. பழக்கத்தில் யுத்த வெறி கொண்டவர்கள் எந்த வித்தியாசமும் பாராமலே நடந்து வந்திருக்கின்றனர் என்பது தெரியும். ராஜகுடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் ராஜமகிஷிகளும் இந்த விதிக்குத் தப்பவில்லை. சோழ ஸாம்ராஜ்யம் மகோந்நத ஸ்திதியில் இருந்தகாலத்தில் சிறைப்பிடிக்கப்பட்ட ராஜமகளிர் சோழ மன்னர்களுடைய அந்தப்புறத்தில் குற்றேவல் புரிந்து வந்தனர் என்பதும் போர்க்களத்தில் மன்னர்கள் "ஆனையும் குதிரையும் பெண்டிர் பண்டாரமும்" கைப்பற்றினர் என்பதும் கல்வெட்டுக்களால் தெரியவருகின்றன.

கிருஷ்ண தேவராயர் இவ்விதம் நடக்கவில்லை. அவர் தம்முடைய 'ஆமுக்தமால்யதா'வில் "எதிரிகள் கோட்டைகளையும் அவர்கள் நாட்டையும் கைப்பற்றிவிடவேண்டும். ஆனால் அவர்களுடைய அந்தப்புறத்தவர்கள் உன் கையில் சிக்குண்டால், அவர்கள் தங்கள் பிறந்தகத்தில் எப்படி வாழ்வார்களோ அவ்விதமே அவர்களை நடத்து" என்று கூறுகிறார். அதேபோல அவர் உரியா நாட்டுக் கஜபதி மன்னனை வெற்றி கொண்ட காலத்தில் சிறைப்பிடித்தவர்களுள் ஜனதிபதியின் தேவியர் இருந்ததாகவும், பின்னர் அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்ட பிறகு கிருஷ்ணதேவராயர் அந்தத் தேவியரை விடுவித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

சாதாரணமாகப் போரில் வெற்றி கிட்டிய பிறகு ஜயித்தவர்கள் தங்கள் கீழ்வேலைசெய்த போர்வீரர்களுக்கு ஏராளமான பரிசுகள் வழங்குவர். அன்றி ஜயத்தைப் பலவிதங்களில் கொண்டாடுவர். கோயில்களில் விசேஷ பூஜைகளும், கொண்டாட்டங்களும் நடைபெறும், பல சமயங்களில் தங்கள் நாடுகளின் வரியை வஜா செய்துவிடுவதும் உண்டு.

(இந்த எட்டாவது கட்டுரையுடன் இந்த ஆராய்ச்சித் தொகுதி முடிவு பெறுகிறது. இதற்கு முந்தியகட்டுரை சென்ற மாதம் 13-ந் தேதி யிட்ட இதழில் பிரசுரமாகியிருக்கிறது.)

சந்தோஷமாகவும், ஆரோக்யமாகவும், மெலிவாகவும் ஏன் இருக்கக்கூடாது ?

தினசரி இரவு தவறாமல் இரண்டு பைல்பீன்ஸ் மாத்திரைகளை உட்கொண்டுவந்தால், இழந்த ஜீவசக்தியை திரும்பப்பெற்று, யௌவனமாகவும், மெலிவாகவுமிருந்து வாழ்க்கையைப் பூராவும் அனுபவிக்கலாம்.

பைல்பீன்ஸ் சுத்த தாவர சத்து, ஜீரண சக்தியை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்தி செய்து, கொழுப்பு ஏற்படும்சக்திகளை வெளிப்படுத்தி, ஆரோக்யமாகவும், மெலிவாகவும் வைத்திருக்கும்.



எல்லா மருந்து வியாபாரிகளும் பைல்-பீன்ஸ் பாட்டில் ரூ.1 வீதம் விற்கின்றனர்.

BILE BEANS

பைல்பீன்ஸ் ஆரோக்யமாகவும், திடமாகவும் வைத்திருக்கும்.

பாரஸீகத்தில் ஜெர்மன் வேவு

★

உளவாளிக் கதை

★

'நியாயவாதி' எழுதியது

★

ஐரோப்பா—ஆசியா ஆகிய இரு கண்டங்களும் அடங்கிய பெரிய நிலப்பரப்பில் கேந்திரஸ்தானத்தில் அமைந்துள்ளது பாரஸீக தேசம். யுத்தகாலத்தில் அத்தேசத்தில் இருந்து வேலை செய்வது அவசியமானது என்பதை இரு தரப்பாரும் அறிவர். மத்திய ஸ்தானத்தில் உள்ள அப்பிரதேசத்தில் வேவு ஸ்தாபனத்தை ஜெர்மனியர் அமைத்து நடத்திவந்ததில் யாதொரு வியப்புமில்லை. ஹிட்லரின் பிரசாரப் படையும் ஐந்தாம் படையும் அந்நாட்டையே அவரது வசத்தில் விழும்படிச் செய்ய முயன்றனர். நேசதேசத்தார் அதற்கு இடங் கொடுக்காமல் எச்சரிக்கையாய் நடவடிக்கை எடுத்துக் கொண்டனர். அச்சு நாடுகளது வேவுகாரர்கள் கைது செய்யப்பட்டனர். நேசக்கக்ஷியாருக்கு விரோதமாக இருந்த ராஜங்கம் வீழ்ச்சியுற்றது. ஷா மன்னர் முடி துறக்கவும் நேரிட்டது. பிரிட்டிஷாருக்கு சினேகித மனப்பான்மை கொண்ட துரைத்தனம் அமுலுக்கு வந்தது. சுருங்கக் கூறில் பாரஸீகம் யுத்தத்தில் நேர்முகமாக சேராவிடினும் நேச நாட்டாருக்கு பலவிதங்களிலும் உதவி புரியும் சாதனமாக இருக்கிறது என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

பாரஸீகத்தில் எதிரி வேவுக்காரரால் விளையக்கூடும் இடுக்கண்களையும் பாதகங்களையும் பிரிட்டிஷ் ராஜாங்கம் நன்கு அறியும் என்னலாம். ஏனெனில் சென்ற மகாயுத்தத்தில் நேர்ந்த அனுபவத்தை அது மறக்க கூடியதன்று. அச்சமயம் ஒரு திறமை வாய்ந்த ஜெர்மன் உளவுகாரன் பாரசிகத்தில் அற்புதமாக வேவு நடத்தினன். அவனது அதிசய கதையை இனி கூறுவோம்.

வாஸ் முஸ் வரலாறு

அவன் பெயர் வாஸ்முஸ். யுத்தம் ஆரம்பமானபொழுது அவன் பாரசீக நாட்டின் தெற்குப் பிரதேசத்தில் இருந்தான். அவனது சக்தியும் செல்வாக்கும் அளவிடக் கூடாதவை. நாட்டிலுள்ள ஜனங்களுடன் பழகிய அவன் எல்லாருடைய மதிப்பையும் நல்லுணர்ச்சியையும் பெற்றது இயல்பேயன்றி வேறல்ல. அவனது வார்த்தைப்படி நடப்பதற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தனர். அரேபியாவில் ஆங்கிலேய வீரன் லாரன்ஸ் எப்படி பிரபலமாய் முழங்கினனோ அதை விட அதிக பிராபல்யத்துடன் விளக்கினன் இந்த ஜெர்மானிய வேவுகாரன்.

யுத்தத்தில் பாரசீகம் நடுநிலைமை வகித்தது. ஆனல் வெற்றியின் மீது நாட்டம் செலுத்திய ஜெர்மன் அரசாங்கம் அதை தங்களுக்கு அனுகூலமான எல்லாவழிகளிலும் பயன் படுத்திக் கொள்ள முயன்றது. பாரஸீகத்திலுள்ள எண்ணெய் ஊற்றுகள் தனக்குத்தேவையான எண்ணெயைக் கொடுக்கவேண்டும் என்று அது அக்கறை கொண்டது. பெயரளவுக்கு நடுநிலைமை வகிப்பினும், உண்மையில் தனது யுத்த முயற்சிக்கு எல்லாவித மான வசதிகளையும் பாரஸீகம் அளிக்கவேண்டுமென்று ஜெர்மன் துரைத்தனம் விரும்பியது.

ஜெர்மன் அதிகாரிகளிடமிருந்து ஏராளமான துகைகளைப் பெற்ற வாஸ் முஸ் தன் செல்வாக்கை முற்றிலும் பயன்படுத்திக் கொண்டான். அவனல் கையாளப்பட்ட வேவு முறைகளையும் அவனல் தனது நாட்டுக்காக நடத்தப்பட்ட பிரசாரத்தையும் விவரித்துக்கூற இங்கு இடமில்லை, தனது நாட்டுக்காக அவன் சிறந்த யுத்த சேவை புரியலானன்.

துணிகரமான தொழில்

அவனது செல்வர்க்கையும் அவனல் நடத்தப்பட்ட வேவையும் கண்டு அஞ்சிய பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. அவனது நடவடிக்கைகளால் பாரஸீக நாட்டின் நடுநிலைமைக்குப் பங்கம் ஏற்பட்டதென்று அது குறைகூறி அவனை கைது செய்ய முனைந்தது. அதன் விருப்பத்துக்கு பாரஸீக சர்க்கார் இணங்குவதன்றி வேறு வழியில்லை. ஜெர்மானிய வேவுகாரன் கைதுசெய்யப்பட்டு பிரிட்டிஷாரிடம் ஒப்புவிக்கப்பட்டான்.

ஆனல் அவன் பிரிட்டிஷாரின் பந்தோபஸ்தில் வெகு காலம் இருக்கவில்லை. சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டான்.

அதுமட்டுமன்று, தன்னிடமுள்ள ஏராளமான தங்க நிதியுடன் அவன் வெளியேறினபடியால், அவனது சிறையடைப்பு நேச தரப்பாருக்கு எத்தனையோ பாதகங்களை விளைவித்தது.

பாரஸீக விரிகுடாவின் முனையில் தனது வேவு ஸ்தாபனத்தை நிறுவிய அவன், அங்கிருந்து தனது நாட்டுக்கு முதல்தரமான சேவை புரிந்தான். தன்னுடைய சக்தியும் செல்வாக்கும் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவன், சாதாரணமாய் ஐரோப்பியன் எவனும் செய்யத் துணியாத காரியத்தையும் செய்யத் துணிந்தான். அப்பிரதேசத்தில் பிரபலமாய் விளங்கிய ஒரு சிற்றரசனின் மகளை மணந்து கொண்டான், அச்சமயம் அவன் சுற்றுப் பக்கங்களில் இருந்த பாரஸீக பிரமுகர்களுக்கு ஒரு விருந்து நடத்தினன். அச்சம்பவத்தால் அவனது சீரும் செல்வாக்கும் பல மடங்கு ஓங்கலாயின.

எதிரிகளுக்கு அனுகூலம்

அவனல் பிரிட்டிஷ் தரப்பினருக்கு விளைவிக்கப்பட்ட இடையூறுகளும், எதிரி தரப்பாருக்கு ஏற்பட்ட அனுகூலங்களும் இவ்வளவு அவ்வளவன்று மத்திய கிழக்கிலுள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும் எத்தனையோ உபயோகமான உளவுகளையும் தகவல்களையும் அவனுக்குக் கொணர்ந்தனர். கிழக்கே இந்தியாவிலிருந்து மேற்கே சூயஸ் பிரதேசத்துக்கு அப்பால் வரையில் நடைபெற்ற ஜெர்மன் வேவுக்கு அவன் தான் அதிகாரி. இந்த அகண்ட பிரதேசத்தில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவமும் அவனுக்குத் தெரியும். எதிரிகளது ரகசியங்களில் அவனுக்குப் புலனகாதது ஒன்றுமில்லை. பிரிட்டிஷ் ராணுவமோ, கடற்படையோ அவனது வேவு எல்லைக்குள் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும் அவனுக்கு முன் கூட்டியே அவனது ஒற்றர்களால் உணர்த்தப்படும். இது ஜெர்மன் யுத்த அதிகாரிகளுக்கு எவ்வளவு அனுகூலமானது என்பதைப்பற்றி அதிகம் கூறவேண்டியது அவ்சியமன்று.

இப்படி அதிசய சக்தியுடன் வேவை நடத்திய வாஸ்முஸ் யுத்தத்தின் போக்கிலும் ஓரளவு ஆதிக்கம் செலுத்தினன் என்பது உண்மையான விஷயம். மத்திய கிழக்கிலுள்ள யுத்த அரங்கங்களில் பிரிட்டிஷாருக்கு ஏற்பட்ட அபஜயங்களுக்கும் பிரதிகூலங்களுக்கும் காரணபூதனய் விளங்கிய அவனது சக்தியை உணர்ந்த அவனது எதிரிகள் வியப்பும் கலக்கமும் அடைந்தனர். துருக்கி சீக்கிரத்தில் வீழ்ச்சியடையாது மூன்று வருஷங்களுக்கு மேல். யுத்தத்தில் ஈடுபட்டு நின்றதற்குக் காரணம் அவனது வேவின் திறமைதான்.

நாட்டைவிட்டு ஓட்டம்

தெற்குப்பாரசீகத்தில் அவனே முடிசூடா மன்னன் என்று சொல்லவேண்டும். பாரஸீகப் பெண்ணை மணந்து பாரஸீகரது நடையுடைபாவனைகளைத் தழுவிய அவனை அப்பிரதேசத்து மக்கள் தங்களது தலைவனய் கருதி அவனது விருப்பத்தின்படி நடந்ததில் யாதொரு விந்தையுமில்லை, அவனது சொற் கொண்ட அவர்கள் ஆங்கிலேயரைத் தங்களது விரோதிகள் என்றுகருதி அவர்களுக்கு எவ்விதமான உதவியும் அளிக்க விரும்பவில்லை. எனினும் அவனது சீரும் சிறப்பும் நிலைபெற்றிருக்கவில்லை. அதற்கு அவனது நாட்டின் அவகேடும் யுத்தத்தில் ஜெர்மானியர் அடைந்த தோல்வியுமே காரணங்கள். அவனது ஸாகசங்களும் புளுகுப் பிரசாரமும் எத்தனை காலத்துக்குத்தான் உண்மையை மறைக்க முடியும்? மேலும் ஜெர்மனியிலிருந்து அவனுக்குப் பிரசாரத்துக்கு அனுப்பப்பட்ட பண உதவி நின்று விட்டது. வெறுங் கை முழம் போடுமா? பாரஸீக ராஜாங்கம் அவனது நாட்டுக்கு ஏற்படவிருந்த படுதோல்வியையும் பெருவீழ்ச்சியையும் உணர்ந்து கொண்டது. பிரிட்டிஷாருக்கே வெற்றி என்பதை சந்தேக மற அறிந்து கொண்ட பின், பாரஸீக அதிகாரிகள் ஜெர்மன் உளவு தலைவனைக் கைவிடலாயினர். அது மட்டுமன்று. அவனைப் பிடித்து அவனது எதிரிகளிடம் ஒப்புவிக்க உத்தேசித்தனர்.

ஆனல் வாஸ்முஸ் அவர்களது வசம் சிக்கும் முட்டாளல்லவன்றே? தனது மைத்துனன் உதவியால் அவன் நாட்டை விட்டு ஓடி விட்டான்.

நபுன்சகத் விரோதி

அம்ருதம் போன்ற ஏ. பி யாகுடி

இளமையும், வீரியமும் அளிக்கும் ஒளஷதம். ரத்தசுத்தியளித்து, தளர்ந்த நரம்புகளுக்கு வலுவூட்டி, வீரிய விருத்தியளித்து, இல்லற வாழ்க்கையை இன்பமாய்க்கழிக்க உதவும். பாட்டில் ரூ. 10.

ஏ. பி. எண்ணெய்.

வெளிப்பூச்சுக்கு; எல்லா தோஷங்களையும் நிவர்த்திக்கும் அருமையான தைலம் பாட்டில் ரூ. 15.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோடு, மதராஸ்.
ஏஜண்டு: எஸ். டி. பல்டானே புரசவாக்கம்.

கே. சுவாமிநாதன் & கோ



24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

குட்டிக் கதை

பொழுது புலர்ந்தது!

★

"ரேவதி" எழுதியது

ஜானகி முகம் சோகமே உருவெடுத்தாற்போல் தோன்றியது. மங்கிய வெளிச்சத்தில் அவள் பிரேதம்போல் அலமாரியை நோக்கி நடந்தாள். யந்திரம் போல் அவள் கைகள் மருந்தை எடுத்தன. டிங் என்று கண்ணுடி டம்ளரின் மேல் மருந்து புட்டி மோதின சப்தம் அறை முழுவதும் ஒலித்தது. குழந்தை திடுக்கிட்டு விழித்துக்கொண்டு ஜீவனற்று அழ ஆரம்பித்தது.

ஜானகி பரபரப்புடன் கட்டிலிடம் வந்தாள். குழந்தையை இருகரங்களாலும் தூக்கி மார்போடு அணைத்துக்கொண்டாள். அனல்வேகம் அவள் மார்பை தஹித்தது. மெதுவாய்க் குழந்தையை மடிமேல் போட்டு, மருந்தைப் புகட்டினுள். படுக்கையின்மேல் குழந்தையைத் தூக்கிவிட்டு, பித்தம் பிடித்தவள்போல், நாற்காலியைப் பக்கத்தில் இழுத்துப் போட்டுக் கொண்டு, அசைவற்று உட்கார்ந்திருந்தாள்.

"அம்மா! ஜானகி, மணி ராத்திரி ஒண்ணு அடிக்கப் போறதே? இன்னிக்கு நாலு வாரமாச்சு, இப்படியே அந்தக் குழந்தையோடே பிராணனை விட்டா, உனக்கு உடம்புக்கு வந்தூட்டா என்ன செய்வது? முதல் பிரசவமாகி நன்னு உடம்பு தேறி இருந்தவ, இப்படி நடைப்பிணமாட்டம், எலும்பும் தோலுமாப் போயாச்சு! நான் சித்தே பாத்துக்கரேன்; நீ போய்ப் படுத்துக்கோடி!" என்று ஜானகி மாமியார் கூறிவிட்டு, ஒரு பதிலும் வராததைக்கண்டு: "இது தினம் ஒரு பாடம் உம்!" என்று பெருமூச்சு விட்டு, மறுபடியும் படுக்கச் சென்றுள்.

நாளைப்பொழுது விடிவதற்குள் சுரம் விட்டு விடும் என்று, டாக்டர் தைரியம் சொல்லிவிட்டுப்போன ஒரு எண்ணம்தான் ஜானகி மனதில் இருந்தது. மற்றைய விஷயங்கள் எல்லாம் ஜானகிக்குச் சூனியமாகத் தோன்றிற்று.

கடிகாரம், டிக், டிக், டிக், டிக் என்று அடித்துக் கொண்டிருந்தது. எங்கும் நிசப்தம். ஜானகி குழந்தையை, நிமிஷத்துக்குப் பத்துத்தரம் தொட்டுப் பார்த்தாள். குழந்தைக்கு வேர்க்க ஆரம்பித்தது. ஜானகி மெதுவாக விசிறியைத் திருப்பிவிட்டாள். குழந்தை மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்துச் சிரித்தது! ஜானகி, குழந்தையை அப்படியே வாரி அணைத்துக் கொண்டாள்! அவள் கைகள் நடுங்கின. அவள் முகம் கோரமாக வெளுத்தது! "அம்மா!" என்று கதற வாயெடுத்தவள், அப்படியே தொண்டை அடைத்து ஸ்தம்பமாய் நின்றுவிட்டாள்! அவள் வெறித்த கண்கள் அலமாரியை விட்டு அசையவில்லை. திறந்த அலமாரியில், "விஷம்! உள்ளுக்குக் கொடுக்கக் கூடாது!" என்ற மருந்துபுட்டி பாதி காலியாக இருந்தது!

'கொக்கரகோ!' என்று கோழி கூவிற்று. பல பல என்று பொழுதும் விடிந்தது.

தென்னட்டுத் திலகம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

போது மிஸ்டர் மாண்டேகு இவரை இழிவுபடுத்திப் பேசினர். இதை வியாஜமாகக் கொண்டு சில பத்திரிகைகளும் இவரைத் தாக்கின. இவை எல்லாவற்றையும் உத்தேசித்து இவர் இவ்வருஷம் தமது பட்டங்களை யெல்லாம் ஸர்க்காருக்கே திருப்பிக் கொடுத்து விட்டார். இவர் செய்த முடிவு மிகவும் துணிகரமானது தான்! எல்லோருக்கும் சாத்தியம் அல்ல! ஆனல் மகாத்மாஜி பிறகு வகுத்த திட்டத்திற்கு இது ஓரளவு வழி காட்டியாகவே விளங்கியது. ஒத்துழையாமையின் முதல் அம்சத்தை இது புலப்படுத்தியது. இதற்கப்புறம் இவர் தீவிரமாகப் பொதுஜன ஸேவையில் பங்கெடுத்துக்கொள்ள இயலவில்லையாயினும் ரௌலட் சட்டத்தைப் பலமாக எதிர்த்தார். இவ்வாறு நாட்டிற்கு உன்னதமான ஊழியம் புரிந்த மணிஐயர் தமது எண்பத்திரண்டாம் பிராயத்தில் இண்டியில் 1924-ம் வருஷம் டிசம்பர் மாதம் 5-ம் தேதி காலமானர், உத்தமமான தேசபக்தர் மறைந்தார். பரிபூரண வாழ்க்கை பூர்த்தி பெற்றது. அன்பின் அகம்: உண்மையின் உருவம்: சீலத்தின் சிகரம்: குணக்குன்று இவ்விதம் மக்கள்—இவரைப் போற்றித் தொழுதனர். இவைகளுக்கு இன்றும் இவரே பிரமாணம்! இத்தகையவரது பேரும் புகழும் இன்றளவும் நீடித்திருப்பதன் மர்மமும் இதுவே. ஒரு நூற்றுண்டு முடிந்த போதிலும் இவர் போன்றவர்களது கீர்த்தி எப்படிக் குறையும்? மக்களின் மனத்தகத்தில் குடிகொண்ட இப்பெரியாரது பெருமை சாஸ்வதமாக நிலைத்திருக்கும் அன்றே!

Dr. Paul's Pure Lotus Honey

The Infallible Medicine for Cataract Glaucoma, Ophthalmia, Ulcers of Eyes, and all other eye diseases. Acts like Magic. Price Two Dram Phial Rs. 2 V. P. Extra. S. PAUL & CO., (Dept. S. W.) 4, Hospital Street, Dharamtola, CALCUTTA.

மேஜர் குமாரமங்கலம்

சென்ற மே மாதம் 27-ம் தேதியன்று பீர்ஹக்கிமுக்கருகில் எதிரிகளது டாங்கிப் படை தாக்கியபோது கலவரமடையாமல் சண்டை புரிந்த மேஜர் குமாரமங்கலத்திற்கு "டி. எஸ். ஓ" (சிறந்த சேவை சின்னம்) அளிக்கப்பட்டது. இவர் டாக்டர் சுப்பராயனின் புத்திரர் (பி பி. பி.)

501 ஸ்பெஷல்
உங்கள் சலவைத் தொல்லைகளை ஒழிக்கும்

ஆடைகளை சுத்தமாக வெளுக்கவில்லையே என்றும், ஷர்ட்டுகளும், புடவைகளும் சலவை செய்யப்படும்போது கெட்டு விடுகிறதே என்றும் கவலைவேண்டாம். 501 ஸ்பெஷல் உபயோகித்து வாருங்கள்-உங்கள் தொல்லையெல்லாம் ஒழியும். 501 ஸ்பெஷல் சலவை செய்வதில் நிகரற்றசக்தியுடையது. மேலும், அது மிருதுத்தன்மையுள்ளது. அதன் திரண்ட நுரை உங்கள் மெல்லிய ஆடைகளைக் கெடுக்காமல் வெளுக்கச்செய்கிறது. 501 ஸ்பெஷல் உபயோகிக்கத் தொடங்குங்கள். இன்றே ஒரு பெட்டி வாங்குங்கள்.

501 ஸ்பெஷலைத் தவிர பிரசித்தி வாய்ந்த 501 வாஷிங் ஸோப்புமுள்ளது. அதன் விலை இன்னும் குறைவு. எல்லா வீட்டுக் காரியங்களுக்கும் தகுதியான ஸோப்பு. சதுரக் கட்டிகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும், சீவல்களாகவும் எல்லா பிரபலக் கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் ஸோப்பு வில்லைக் கட்டிகள் மூன்று விதமாக பெட்டிகளில் பாக்கு செய்து விற்கப் படுகிறது. மிருகக் கொழுப்பற்றது.

டாம்கோ விற்பனை இலாகா :—
நெ. 1, வாரன் ரோட், பீமன்பேட் — மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடாபுரம் & பம்பாய்.

F S. 1946

சென்றவார நிகழ்ச்சிகள்

★

அல்லா பக்ஷ் முடிவு

ஸிந்து பிரதம மந்திரி கனம் அல்லா பக்ஷ் பிரிட்டிஷ் ஸர்க்கார் கொள்கையைக் கண்டிக்கும் முறையில் தமது, "கான் பகதூர்" பட்டத்தையும் "ஓ. பி. இ." பட்டத்தையும் துறந்து விட்டார். சென்ற மாதம் 26-ந் தேதி மாலை கூடிய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அவர் இவ்விஷயத்தை வெளியிட்டார். அவர் பிரிட்டிஷ் சர்க்கார் இந்நாட்டிலுள்ள ராஜீய வகுப்பு பேதங்களைப் பயன் படுத்திக் கொண்டு தேசிய வாழ்க்கையைக் குலைத்து இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்திருக்கவே இன்னும் முயலுவதாகவும் அவர்கள் தங்கள் சுய நலத்தையே நாடுவதாகும் அவர் குறிப்பிட்டார். இது சம்பந்தமாக அவர் வைஸ்ராய்க்கு எழுதியிருக்கும் கடிதத்தையும் கூட்டத்தில் படித்துக் காட்டினார்.

* * * *

பத்திரிகைகளுக்கு நிர்ப்பந்தம்

பத்திரிகாசிரியர்கள், பத்திரிகைகளைப் பிரசுரிப்பவர்கள். அச்சிடுபவர்கள் சம்பந்தமாகச் சில நிர்ப்பந்தங்களை விதித்து ஆகஸ்ட் 8-ந் தேதி மத்திய ஸர்க்கார் பிறப்பித்த உத்தரவு சென்னை, வடமேற்கு எல்லைப் புற மாகாணம் சம்பந்தப் பட்ட மட்டில் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும் செய்திகள், இந்தியாவிலுள்ள மூன்று செய்தி ஸ்தாபனங்கள் மூலம் கிடைக்கும் செய்திகள் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளின் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட நிருபர்களிடமிருந்து கிடைக்கும் செய்திகள் இவை நீங்கலாக காங்கிரஸ் இயக்கம் பற்றிய வேறுவிதமான செய்திகள் மேற்படி தேதிய உத்தரவினால் தடை செய்யப்பட்டன.

* * * *

ராஜாங்க சபை

ராஜாங்க சபை சென்றமாதம் 25-ந் தேதி கூடியபோது சர்க்கார் மசோதாக்கள் ஐந்தும் உத்தியோகப் பற்றற்ற மசோதா ஒன்றும் நிறைவேற்றப்பட்டன. யுத்த செலவைப் பங்கிட்டுக் கொள்ளும் விஷயத்தில் பிரிட்டிஷ் ஸர்க்காரும், இந்திய ஸர்க்காரும் மத்ய சட்ட சபையிலுள்ள பற்பல கட்சிப் பிரதிநிதிகளையும் கலந்து கொண்டு புதிதாக ஒரு திட்டம் வகுக்க வேண்டுமென ஜனுப் ஹுஸேன் இமாம் ஒரு பிரேரணை கொண்டு வந்தார். அது தோற்று விட்டது. அதனை ஆதரித்து 11 ஓட்டுகளும் எதிர்த்து 22 ஓட்டுகளும் கிடைத்தன.

ஸிவில் புரோஸிஜர்கோடைத் திருத்தக் கொண்டுவரப்பட்ட மசோதாக்கள் இரண்டும், ரப்பர் கட்டுப்பாடுச் சட்டத்திருத்த மசோதா ஒன்றும், இந்தியக் கம்பெனிச் சட்டத் திருத்த மசோதாவும் இந்தியா சட்டசபையில் நிறைவேறியதுபோல இங்கும் நிறைவேறிவிட்டன. சமஷ்டிக் கோர்ட்டுக்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பதற்காக ஸ்ரீமான் பி. என். ஸப்ரூ கொண்டுவந்த ஒரு மசோதாவும் நிறைவேற்றப் பட்டது.

* * * *

இந்தியாவில் யுத்தச் செலவு

ராஜாங்க சபையில் செப்டம்பர் 28-ந் தேதி கூட்டத்தில் ஸ்ரீ ராஜா யுவராஜ தத்த ஸிங்கின் கேள்விக்குப் பதிலளிக்கையில் பொக்கிஷ இலாகா காரிய தரிசி மிஸ்டர் ஸி. இ. ஜோன்ஸ் தற்போது ராணுவ அக்கௌண்டண்ட் ஜெனரலின் கணக்குப் பிரகாரம் இந்தியாவில் பாதுகாப்பு, ஸப்ளை வகையில் தினசரி 1½ கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறதென்றும், இதில் இந்தியா பங்கில் எவ்வளவு பணம் பிரிட்டிஷ் சர்க்கார் பங்கில் எவ்வளவு பணம் என்பதை நடைமுதல் வருஷத்தின் திருத்தி அமைக்கப்படும் வரவு செலவுத் திட்டம் தயாராவதற்கு முன் நிதானிப்பதற்கில்லை என்றும் கூறினார்.

* * * *

ஸர் ஸேதல்வாட் கண்டனம்

ஸர் சிமன்லால் ஸேதல்வாட் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

ராஜாங்க சபைக் கூட்டத்தில் வைஸ்ராய் நிருவாக சபை அங்கத்தினர்கள் சிலர் பேசியிருக்கும் விதத்தை நோக்க மிக்க வருத்தமாகவிருக்கிறது; தற்காலிகமாக மத்ய சர்க்கார் அமைக்கும் விஷயம் கவர்னர் ஜெனரலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் கவனிக்க வேண்டிய விஷயமென்றும், தங்கள் ஆலோசனையைக் கேட்டால் தான் நிருவாக சபையினர் ஆலோசனை கூறமுடியுமென்றும் கனம் உஸ்மான் அன்று கூறினார். அவ்விதமிருந்தால் நிருவாக சபைக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் உள்ள சம்பந்தம் வெகு நன்ருகவிருக்கிறது இவ்விதம் கேட்டால் தான் ஆலோசனை செய்வோமென நிருவாக அங்கத்தினர்கள் கூறினால் இந்த நிருவாக சபையை விஸ்தரித்துத்தான் பயன் என்ன? இந்திய அங்கத்தினர்கள் தைரியமாக முன் வந்து அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுவார்கள் என்று தான் நாட்டினர் எதிர்பார்க்கிறார்கள். ஸர் சுல்தான் ஆமத், ஸர். எச். மோடி, டாக்டர் அம்பேத்கார், ஸ்ரீமான் ஆனே முதலியவர்களும் ஸர் முகம்மது உஸ்மான் குறிப்பிட்ட படி இவ்வித நிபந்தனையுடன் ஆலோசனை கூறுவார்களா!

இது தவிர ஸர் ஜே பி. ஸ்ரீவத்ஸவா தங்கள் ஆலோசனையை எப்போதும் கவர்னர் ஜெனரல் நிராகரிக்கவில்லையென்றும், தாங்கள் ஒரு மந்திரி சபைபோல விருந்தே வேலைசெய்வதாகவும் கூறினார். இவர்களில் யார் சொன்னது சரி? தேசீய சர்க்கார் ஏற்படும் முறையில் முயற்சி செய்யவே இந்த நிருவாக சபை விஸ்தரிக்கப்பட்டதென்றால், இந்திய நிருவாகிகள் சபையில் செய்யும் வேலை இன்னதெனத் தெரியவேண்டும். இல்லையானால் விஸ்தரித்துப் பயனில்லை.

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

ஸ்டாலின்கிராட் போர்

ஸ்டாலின்கிராட் போரில் மார்ஷல் டிமோஷெங்கோவின் கை படிப்படியாக ஓங்கி வருவதாகத் தெரிகிறது. நகரத்தின் வடமேற்கே நாஸி அரண் வரிசைகளில் ரஷ்யத் துருப்புகள் ஒரு புது பிளவை உண்டு பண்ணியிருக்கிறது. தமது இடது பக்க வாட்டுப் படையைக் காப்பாற்றிக் கொள்ள இன்னும் அதிகமான ஆட்கள், டாங்குகள், விமானங்கள் ஆகியவற்றை உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வான்பார்க்குக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஒரு முக்கிய ஸ்தலத்தை திரும்பப் பிடித்ததாக ஸோவியத் அறிக்கை கூறுகிறது.

ஸ்டாலின்கிராடுக்குப் பக்கத்தில் வடமேற்கேயுள்ள முக்கிய வட தெற்கு ரயில் ரஸ்தாவை மார்ஷல் டிமோஷெங்கோ துண்டித்து விட்டதாக ஸ்டாக்ஹோமிலிருந்து வந்த செய்தியொன்று கூறுகிறது. இப்பாதை வழியாகத்தான் ஜெர்மன் சப்ளைகள் வந்து கொண்டிருந்தன. ஆனால் மார்ஷல் டிமோஷெங்கோவின் முக்கிய நோக்கம் நிறைவேறிவிட்டதாக இது உறுதிப்படுத்தவில்லை. தெற்கு ஜில்லாக்களில் வால்கா நதிகரைகளுக்குப் பக்கத்தில் உக்ரமான போர் நடந்து வருகிறது. வான்பார்க் முக்கிய தாக்குதலை நடத்தும் மேற்கு ஜில்லாக்களில் ஜெர்மனியருடன் சிறிது தெருச் சண்டை நடக்கிறது. இங்கு நகரத்தின் நடுமத்தி வழியாக வால்காவுக்குச் செல்லும் அகன்ற மேற்கு கிழக்கு பாதையை ஊடுருவிச் செல்ல ஜெர்மனியர் பகீரதப்பிரயத்தினம் செய்கின்றனர். நகரின் வடமேற்கே மிகப் பெரிய போர் இப்பொழுது நடந்து வருகிறது இங்கு கடுமையான தெருச் சண்டை நடக்கிறது. இங்கு ஸோவியத் அரண் வரிசைகளில் வான்பார்க் மிக அபாயமான ஆழ்ந்த பிளவை உண்டுபண்ணியிருக்கிறார்; மேலும் ஜெர்மனியர் நகரத்தின் மீது ஓயாத குண்டு வீச்சை நடத்தி வருகின்றனர்.

முற்றுகை ஆரம்பித்தபோது இருந்ததை விட இப்பொழுது நம்பிக்கை அதிகமிருப்பதாக ராணுவ விமர்சகர்கள் கருதுகிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்னைவிட இப்பொழுது ஸ்டாலின்கிராடு பாதுகாப்பு அதிக பலமுள்ளதாயிருக்கிறது. இன்னும் பல வாரங்கள் அது எதிர்ப்பைத் தாங்கி நிற்குமென்றே கருதப்படுகிறது.

* * * *

மடகாஸ்கர் தலைநகர் பிரிட்டிஷ் வசம்

பிரிட்டிஷ் துருப்புகள் மடகாஸ்கரின் தலைநகரான அன்டோனரிவோவை ஆக்கிரமித்துக்கொண்டுவிட்டன.

மேற்குறித்த செய்தியை ஒரு பிரிட்டிஷ் அதிகாரி அந்நகர ரேடியோ மூலம் அறிவித்தார். பிரிட்டிஷ் படை அண்டனரிவோவுக்குள் பிரவேசித்ததாகவும், அனைத்தும் அமைதியாயிருப்பதாகவும் அவர் கூறினார்.

ராய்ட்டரின் ராணுவ நிருபர் அறிவிப்பதாவது:—

தலைநகரான அன்டனரிவோவை நேசப்படை ஆக்கிரமித்துக்கொண்டதுடன், மடகாஸ்கரில் விச்சிப் படையின் எதிர்ப்பு தீர்ந்துவிட்டதெனச் சொல்லலாம். தீவின் வட பாகத்திலுள்ள கடற்படைத் தளங்கள் சென்ற மே மாதம் கைப்பற்றப்பட்டன. சென்ற 10-ந்தேதி தீவின் வேறு பாகங்களிலும் பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கலாயின. விச்சிப்படைகள் ஓரளவு எதிர்த்தனவாயினும், நேசதேசத் துருப்புகள் மஜுங்கா, அம்பஞ்சா, மொரண்டாவா, டமாடேவ் முதலிய துறைமுகங்களைக் கைப்பற்றின.

வில்கி-ஸ்டாலின் சம்பாஷணை

ஜனாதிபதி ரூஸ்வெல்டின் பிரதிநிதியான மிஸ்டர் வெண்டல் வில்கி செப்டம்பர் 23-ந் தேதி மிஸ்டர் ஸ்டாலினுடன் 2 மணி நேரம் சம்பாஷித்தார். அப்போது ரஷ்ய அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர் மொலடவும் பிரசன்னமாயிருந்தார்.

இதற்குச் சிறிது நேரத்திற்கு முன மிஸ்டர் வில்கி மாஸ்கோவின் அரண்களைச் சுற்றிப் பார்வையிட்டு "நான் பார்த்தவற்றில் எந்தப் பெரிய நகரத்திலும் இவ்வளவு நன்ருக அரண் செய்யப்பட்டதில்லை" எனக் கூறினார். ஏராளமான ஸ்திரீகள் விமான எதிர்ப்பு பீரங்கிகளை இயக்குவதில் உதவி புரிவது கண்டு தாம் ஆச்சரியமடைந்ததாயும் மிஸ்டர் வில்கி தெரிவித்தார்.

பீரார் ஏஜண்ட்

பீராரில் நிஜாமின் ஏஜண்டாக இருந்த ஸர். எம், வெங்கட்டசுப்பராவ் —பி. பி. பி.

சிறுவர் கதை

★

அடப்பம் சுமந்த அரசன்

★

"கோபு"

முன்னொரு காலத்தில் நம் தமிழ் நாட்டில் கங்கை கொண்ட சோழன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் வட நாட்டில் கங்கை நதிக் கரை வரை போய் அநேக அரசர்களை யுத்தத்தில் வென்று தன் ராஜ்யத்தை பெருக்கிக் கொண்டதால் அவனுக்கு கங்கை கொண்ட சோழன் என்ற புனைப் பெயர் உண்டாயிற்று. அவன் நீதி தவருமல் அரசாட்சி செய்து வந்தான். அவன் சபையில் அநேக கவிவாணர்களும், கலை வல்லோர்களும் நிரம்பி இருந்தனர். அவன் அநேக அன்ன சத்திரங்களையும், கல்விச் சாலைகளையும், அழகிய கோவில்களையும் நிர்மாணித்தான். அவன் பெயரால் அநேக கவிவாணர்கள் இயற்றிய பல பாடல்கள் இருக்கின்றன.

அவனுடைய சபையில் கவிராஜ சிங்கம் என்னும் புலவர் பெரும் புகழ் பெற்றிருந்தார். அரசன் அவருடைய கவித்திறமைக்கு மெச்சி அவருக்கு நல்ல மதிப்பு வைத்திருந்தான். அரசனது சபையில் அரசனைப் போல அவருக்கு சரிசமானமான சிங்காதனம் அளிக்கப்பட்டிருந்தது. இதனால் அவர் கர்வம் அடைந்திருந்தார்.

சோழனது ஊழியனுக அம்பலவாணன் என்ற சிற்பி ஒருவன் இருந்தான். அவன் சிற்ப வேலைகள் செய்வதில் திறமைசாலி. அவனுக்கு அரசனிடம் நல்ல மதிப்பு இருந்தது. அவன் அரசனது கட்டளைப்படி அநேக கோயில்களைக் கட்டி வந்தான்.

ஒரு நாள் கவிராஜ சிங்கம், அம்பலவாணனும் ஒரு சோலையில் தனியே சந்தித்தனர். அம்பலவாணன் அவருக்குத் தாழ்மையுடன் வந்தனம் செய்தான். இருவரும் சிறிது நேரம் அரசாங்க விஷயமாக பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கவிராஜசிங்கம், அம்பலவாணனைப் பார்த்து "என்ன இருந்தாலும் அரசன் கவிக்கு அடங்கியவன் தான். அரச சபையில் ஒரு கவிக்குள்ள மதிப்பும் கௌரவமும் வேறு ஒருவருக்கும் கிடையாது. அரசனிடம் லக்ஷ்மி தேவி அடைக்கலம் புகுந்திருக்கிருள். எங்களிடமோ ஸரஸ்வதி தேவி அடைக்கலம் புகுந்திருக்கிருள்" என்ருர்.

அம்பலவாணன் சிறிது நேரம் யோசித்து "ஸ்வாமி! அரசனது கடமை கவிகளையும் கலை வல்லோரையும் காத்து ரக்ஷிப்பதன்ருே? அப்படியே நமது அரசரும் தன் கடமையை உணர்ந்து நடக்கிருர். உமக்கு நாவில் ஸரஸ்வதி தாண்டவமாடுகிருள். என் போன்றவர்களுக்கு கரங்களிலும் மனதிலும் அவள் வசிக்கிருள். அரசர் உங்களைவிட எங்களிடம் வைத்திருக்கும் மதிப்பு கொஞ்சமும் தாழ்ந்தது அல்ல. அவர் எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிருர்" என்ருன்.

அதற்குக் கவி "அப்படி நினைத்து விடாதீர். அரசருக்கு என்னிடம் தனி மதிப்பிருக்கிறது. என்னை சபையில் தன்க்கு கரி சமமான ஆசனத்தில் அமர்த்துகிருர். தவிர, என் வார்த்தைகள் ஒன்றையும் அவர் தட்டுவதேயில்லை" என்ருர்.

"ஸ்வாமி! நீங்கள் நினைப்பது தவறு. அரசர் யார் யாருக்கு எந்தெந்த இடத்தில் மதிப்பு கொடுக்கவேண்டுமோ அங்கு அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கத் தவறுவதில்லை. உங்களை மதித்து கௌரவமாக நடத்த வேண்டிய இடம் அரச சபை. என்னை மதித்து கௌரவிக்க வேண்டிய இடத்தில், எனக்கு அடப்பைக்காரனுகக் கூட அரசர் இருப்பார்" என்ருன்.

அம்பலவாணனின் வார்த்தைகளை கவி மறுத்தார். அம்பலவாணன் "ஸ்வாமி, அதை ஒரு நாள் உங்கள் கண்ணலேயே பார்க்கலாம். அப்பொழுது என் வார்த்தையைத் தாங்கள் நம்புவீர்கள்" என்ருன்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் அரசனும் கவி ராஜசிங்கமும் புதிதாகக் கட்டப்படும் ஒரு கோயிலுக்கு பார்வையிடச் சென்றனர். அம்பலவாணன் அப்பொழுது கோயிலில் சிற்பவேலை செய்து கொண்டிருந்தான். அவன் வேலை செய்து கொண்டிருந்தது கோவிலின் மேல் தளமாதலால், அங்கு ஒரு மரத்தாலான பரண் கட்டப்பட்டிருந்தது. அதில் படுத்துக் கொண்டு தன் வேலையை செய்து கொண்டிருந்தான் அம்பலவாணன்.

அம்பலவாணனிடம் அடப்பைக்காரனுக ஒரு சிறுவன் இருந்தான். அவன் அம்பலவாணன் கேட்கும் போதெல்லாம் பாக்கைக் கொடுத்து, வெற்றிலையில் சுண்ணும்பு தடவிக் கொடுப்பான். அந்த சமயம் அவன் அடப்பப் பெட்டியை கீழே வைத்து விட்டு எங்கோ போய் விட்டான்.

அச்சமயம் அரசன் புலவரோடு அம்பலவாணன் வேலை செய்யுமிடம் வந்தான். அம்பலவாணன் வெற்றிலை போடப் பிரியப்பட்டானதால் "ஏய்! வெற்றிலை கொடு" என்று சொல்லியபடியே, படுத்திருந்தபடி தன் கையை நீட்டினன். பக்கத்தில் நின்று கொண்டிருந்த அரசன் பாக்கைக் கொடுத்து, வெற்றிலையில் சுண்ணும்பையும் தடவிக் கொடுத்தான்.

அம்பலவாணன் அதை வாங்கி வாயில் போட்டு மென்ருன். வெற்றிலையில் சுண்ணும்பு அதிகமாக இருந்ததால் வாய்வெந்து விட்டது. தனக்கு வெற்றிலை கொடுத்தவன் அரசனென்று அறியாத அவன் "முட்டாள்! வெற்றிலையில் சுண்ணும்பை அதிகமாகத் தடவி விட்டாயே" என்று கடிந்தபடி எழுந்தான். அவனெதிரில் அரசனும் கவிவாணரும் நிற்பது கண்டு வெட்கினன். அரசன் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே "எனக்கு இந்தத்தொழில் அதிகப்பழக்கமில்லை. அதனுல் தவறு நேர்ந்து விட்டது" என்ருன்.

ஒரு நாள் கவிராஜ சிங்கமும் அம்பலவாணனும் தனியாக சந்திக்கும் போது, கவிவாணர் "அம்பலவாணரே! உங்கள் வார்த்தையில் துளிக்கூட பிசகில்லை. அரசன் உங்களுக்கு அடப்பம் சுமந்தது மன்றி ஏசல் மொழியையும் ஏற்றுக் கொண்டார். அரசருக்கு என்னிடம் எவ்வளவு மதிப்பு இருக்கிறதோ அதற்குக் குறைந்ததல்ல உங்களிடம் அவர் வைத்திருக்கும் மதிப்பு. நான் என் கவித்திறமையை பெரிதென்றெண்ணி உங்கள் கலைத் திறமையை தாழ்வு படுத்தியது தவறு தான்" என்ருர்.

ஏனெனில் குணத்திலும், தரத்திலும், நறுமணத்திலும் அவை நிகரற்றவை.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்: சேலம்.

MNK-14